July 1935

RbT3 m2 N28
35.8.7
187168

1170/70

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 8—No. 7.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 AUG 1935
MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௮ | யுவ ஆண்டு ஆடித் திங்கள்<br>1935 ௵ ஜூலை மீ | இதழ் ௭ |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்

மெய்ப்பொருள் நாயனார் நாடகம் ... ... ௩௦௫
சாத்தனார் கோயில்கள் ... ... ௩௧௫
ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும் ... ௩௧௧
பாடுவித்த நாயகன் ... ... ௩௨௫
திருக்குறள் விளக்க ஆசிரியர் ... ... ௩௨௭
விநாயகமூர்த்த தத்துவார்த்தம் ... ... ௩௩௦
"நாம் யார்?" ... ... ... ௩௩௪
சித்தாந்த சாத்திரம் ... ... ௨௫௭ - ௨௮௮

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A. (Hons.)

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

# மதிப்புரைகள்

**தமிழ்ச்சோலை** :—இரண்டு பகுதிகளைக் கொண்டது; திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் இயற்றியது. முதற்பகுதி விலை ரூ. 1-8-0; இரண்டாம் பகுதி விலை ரூ. 1-8-0 கிடைக்குமிடம்: முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

இந்நூலில் "நவசக்தி" என்ற வாரப் பத்திரிகையில் வெளிவந்த பல தலையங்கங்களும் சிறுகட்டுரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. நமது தமிழ் நாட்டின் உயர்வு, பண்டைத் தமிழ் மக்கள் நிலை, சமயங்களின் பண்பு, இயற்கை யன்னையின் எழில், அரசியல் சேவை, பல தேசபக்தர்களின் தொண்டு முதலிய பற்பல அரிய பொருள்கள் இக்கட்டுரைகளில் மிளிர்கின்றன. இக்கட்டுரைகளிற் பல அவை பத்திரிகையில் வெளிவந்த காலங்களில் ஆயிரக்கணக்கான தேசபக்தர்கட்கு மனவெழுச்சியை விளைவித்து சிறந்த பணிபுரியுமாறு ஊக்கின வென்பது தமிழ் நாடறிந்தவொன்று. இந்நூல் வடிவிலும் பலமாணவர்கள் மனதிற் செம்பொருள்கள் பலவற்றைப் பதிக்கு மென்பதில் யாதொரு ஐயமுமில்லை. தூய தமிழ் மொழியில் வீரமுள்ள நடையில் எழுதப்பட்டுள்ள பல கட்டுரைகளை வேறு எவர் எழுதவல்லார்? இந்நூலை ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் பல்கால் பயில்க; மொழிப் பற்றும் தேச பக்தியும் பெறுக; தமிழ்த் தொண்டில் தலை நிற்க.

**தமிழ் மொழிச் சிறப்பு** :—துடிசைக்கிழார். திருவாரூர் ஸ்ரீவைத்தியலிங்கதேசிக இலவச வாசகசாலை வெளியீடு. பக்கம் 31. இச்சிறு வெளியீட்டில் திரு. துடிசைக்கிழார் சிதம்பரனாரவர்கள் தமிழ் மொழியின் சிறப்பை அம்மொழியின் தொன்மை, இனிமை, இயற்கை அமைவு, இலக்கண வரம்பு, எளிமை, எழுத்துண்மை, மந்திரசக்தி என்ற ஏழு தலைப்புக்களின் கீழ் மிகவிரிவாகப் பல மேற்கோள்களோடு ஆராய்ந்து நிலை நாட்டியுள்ளார்கள். இவ்வாராய்ச்சி பெரிதும் மெச்சத்தக்கது; இதைப் படிப்பவர்கட்குத் தமிழ்மொழியில் சிறந்த பற்றும் மிகுந்த ஆர்வமும் உண்டாவது திண்ணம்.

**The Mystery of Creation** (scientifically explainad) by D. Gopaul Chetty. பக்கம் 75 விலை ரூபா 1. இச்சிறு ஆங்கில நூலில் இவ்வாசிரியர் சிருட்டி முதலிய பிரபஞ்ச காரியங்களைப்பற்றி சைவ சித்தாந்தமும் வேறு பல சமயங்களும் கூறுவதை விளக்கி

Registered No. M. 2330.

OFFICE OF THE ... STRAR OF BOOKS
21 AUG 1935

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

| மலர் ௮ | யுவ ஆண்டு ஆடித் திங்கள் 1935௵ ஜூலை௴ | இதழ் ௭ |
|---|---|---|

## மெய்ப்பொருள் நாயனார் நாடகம்

[அ. மு. பரமசிவானந்தம்]

இஃது திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் வாலாஜாபாத்திற்கு எழுந்தருளிய ஞான்று இந்துமத பாடசாலை மாணவர்களால் நடிக்கப்பட்டது.

### அங்கம் 1

இடம் : *முத்திநாதன் சபை.*

பாத்திரங்கள் : *முத்திநாதன், மந்திரிகள், (மதியூகி, சதியூகி), சேனைத் தலைவன்.*

முத்தி : *அமைச்சர்களே ! யாவரும் அவையிற் சேர்ந்துளீரா !*

மதியூகி : *அரசே எல்லோரும் இறைவனருளால் இருக்கின்றோம்.*

அரசன் : *ஈண்டு யாம் செய்யவேண்டுவ தொன்றுண்டு.*

சதியூகி : *அரசே நாங்கள் அறிய எடுத்தியம்பும்.*

அரசன் : நாம் இந் நானிலத்தே தனிப்புகழ் நிறுவ வேண்டும். நம் எதிரிகளை யெல்லாம் இத்துணை நாள் பொருது வென்றோம்.

சேனைத் தலைவன் : எல்லாம் நம் சேனையின் ஈட்டமும், மற்றவர் உடன் பலமும், ஒருங்கு சேர்ந்ததோடு தம் உடற் பலமு மன்றோ இப்பொழுது நம்மை வெற்றிகொளச் செய்தது. ஈண்டு அதற்கென்னை?

அர : எல்லாம் உண்மையே! நம்மினும் மேலான ஒருவன் இப்பொழுது பகை வென்று உலகை ஆளுகின்றானே!

சதியூகி : ஆ! அப்படியா! யாரது?

அர : இது தெரியாதா? சேதிநாட்டு அரசனாகிய மெய்ப்பொருளென்பான் நமக்கு மேலன்றோ சிறப்புற்று விளங்குகின்றான். அவன் ஆணவம் அடக்கி ஒருதனிச் செங்கோல் ஓச்சுவ தென்றோ!

சே. தலைவன் : அரசே! இதற்காகத் தாங்கள் மனமாழ்க வேண்டிய தென்னை? நம் சேனையும், நாமும் இருக்க ஏன் மனக்கவலை வேண்டும்? அமைச்சர் ஒருங்கிருக்க உற்ற தென்னே!

அர : நன்றெடுத் தியம்பினீர்! இந்நிலமுழுதும் அடக்கி யாளும் ஒரு பெரும்படையினையும், மற்ற எல்லா நலத்தினையும் உடையவனாயிருக்கும் நம் சேனை எம்மட்டு! அவனை ஒரு பெருஞ் சேனையோடு எதிர்த்து வெல்லல் நம்மால் ஆகாது.

சதியூகி : அப்படியானால் அரசே! எவ்வாறு சூழ்ச்சி செய்து அவனைக் கொல்லவேண்டும்.

மதியூகி : ஈண்டு அவர் கூறுவது ஆராயற்பாற்று. மனு குல முறைப்படி மன்னவர் வரிசையிற் றோன்றியவர்களுக் கெல்லாம் தமக்கொத்த அரசரோடு எதிர்த்து யுத்தம் புரிந்



தால் வெற்றிமாலையுடன் விளங்குவது ; அற்றேல் புறமுதுகிட்டு ஓடாது யுத்தகளத்தில் உயிர்விட்டுப் புகழ்மாலை கொள்வது ; அதுவே அரச நெறி.

அர : ஆமாம் நீ சொல்வது உண்மையே. அதைக் கொள்ள வேண்டுவ தவசியமேனும் காலத்திற் கேற்றவாறே நாம் கொள்ளலே நன்று.

சதியூகி : அரசே! தாங்கள் சொல்லிய துண்மையே. சேனைத் தலைவனும் அதற்குச் சம்மதிப்பான். நம் சேனையோ குறைவு. மெய்ப்பொருளின் சேனையோ அதிகம். இதில் எவ்வாறு நாம் மாறு கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் வஞ்சனை புரிந்தே அவனைக் கொல்ல வேண்டும்.

சே. தலைவன் : அரசே! அதுவும் நன்றே! நம் சேனை மேலும் இத்துணை நாட்கள் பல்வேறிடங்களில் யுத்தம் செய்து அலுத்திருக்கின்றன. பரிமாணமோ குறைவு. எனவே, மந்திரி மாற்றம் புகன்ற மாறுசூழ்ச்சியே நலம்.

மதியூகி : அரசே! ‘எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவதென்ப திழுக்கு’ என்ற பொய்யா மொழியை உள்ளுவீராக. உம் வஞ்சகம் அன்னார்க்கு வெளிப்படின் அவர் கையிலகப்பட்டுக் ‘கெடுவான் கேடு நினைப்பான்’ என்ற சொல்லுக்கு இலக்காவீர்கள். அன்றி வஞ்சனையால் அவரைக் கொன்றாலும் அப்பழி உலகுள்ள வரை ஊன்றி நிற்கும். இத்துணை நாள் நாம் தேடிய நன்மைகளெல்லாம் பொன்றும். தவிர அவர் ஒரு சிறந்த சிவபத்தர். அவரை வஞ்சித் தொழுகின் நமக்குப் பழி உண்டாகும்.

அரசன் : ஆ! மும்மையும் துறந்தாரேனும் மன்னவன் மொழிந்தவாறு மொழிவது வழக்காறன்றோ. அவ்வாறிருக்க நீர் எனக்கு விரோதமாகப் பேசல் நன்றன்று. மறுமுறை கூறின் அவையை விட்டு வெளியேற்றுவேன்.

மதியூகி : அரசே! நான் உண்மையை உரைத்தேன். இது தங்கள் மனதுக்கியைந்த தில்லையாயின் தங்கள் ஊழ் வினைப் பயனே இது என்று கூறுவேன். வந்ததைப் பெறுக. தாங்கள் கூறுமுன்னரே நான் இந்நாட்டை விட்டு வெளியேறுகின்றேன். அரசே சென்று வருகின்றேன்.

(மதியூகி செல்கின்றான்.)

அரசன் : சதியூகி! நன்று. அவன் செய்த தன்மையை நோக்கினையோ. அது கிடக்கட்டும். நாம் மேல் நடக்க வேண்டியதை ஆராய்வாம். அந்த மெய்ப்பொருள் என்பானை எவ்வாறு வெல்லலாம்.

சதியூகி : அரசே! ஈண்டுள்ளோரை அனுப்பி நாம் தனியே ஆலோசிக்க வேண்டிய விடயம். (மெதுவாக) அவர்களை அகற்றும்.

அரசன் : சேனைத் தலைவர்களே! மற்றவர்களே! இன்று சென்று நாளை வாருங்கள்.

(யாவரும் செல்கின்றனர்.)

அரசன் : சதியூகி! எல்லோரும் சென்றனர். இனி நாம் செய்ய வேண்டுவதென்ன.

சதியூகி : அரசே! நான் சொல்வதை அப்படியே கைக்கொள்ள வேண்டுகின்றேன். மெய்ப்பொருளோ சிவனடியார்களை மெய்ப்பொருளென நம்பினவன். எனவே, அவனை ஏமாற்ற முதலில் சிவனடியாராக வேடம் பூணவேண்டும். பிறகு யாவரும் இல்லாத தனிமையில் அவன் இருக்கும் சமயம் பார்த்துச் செல்ல வேண்டும். ஒருவரையும் உடன் சேர்க்காது சென்று கத்தியை மறைவாக வைத்திருந்து உண்மையான சிவபத்தர்போல் நடித்து சமயம் பார்த்து அவன் உயிரைப் போக்கி ஒருவரும் அறியாதபடி ஓடிவர வேண்டும்.

19/7/08



அரசன் : இது தான் தக்க யோசனை. உன் புத்தியை மிகவும் மெச்சினேன். நீ சென்று வருக. நான் மற்ற காரியங்களை முடித்துக் கொள்ளுகின்றேன்.

சதியூகி : அரசே சென்று வருகின்றேன்.

## அங்கம் 2

இடம் : மெய்ப்பொருளார் வீடு.

முத்தி நாதன் : சிவனடியார் வேடத்தோடு வாயிலில் எழுந்தருளல் மெய்ப்பொருளாரின் வாயிற் காவலன் தடுத்தல்.

வாயிற் காவலன் : ஐயா, தாங்கள் ஒரு சிவபக்தராகக் காணப்படுகின்றீர்; ஈண்டு எதற்காக எம்மன்னரைக் குறித்து வந்தீரோ! எம்அரசர் உள்ளே இருக்கின்றனர். நான் சென்று கேட்டு வருகின்றேன். ஈண்டு இவ்வாதனத்தில் எழுந்தருளும். (முத்திநாதன் ஆதனத்தில் அமர்கின்றனன்) (காவலன் உட்சென்று வந்து) எம்பெருமான் அடித்தொண்டர் உட்சென்றருள்க. (சிவனடியார் உள்ளே செல்கின்றனர்) மெய்ப்பொருளாரின் மெய்க் காவலாளியாகிய,

தத்தன் : இறைவனுர் வழித் தொண்டு புரியும் எம் இறையே! ஈண்டு நீர் எழுந்தருள நாம் செய்த புண்ணியப்பேறெதுவோ?

முத்தி நாதன் : ஐயா, யாம் உமது மன்னர் பெருமானைக் காணல் வேண்டும். அவரை எனக்குக் காட்டுமின்.

தத்தன் : அடிகளே! எம் அண்ணலார் துயில்கொண்டிருக்கின்றனர். ஆதலால் சற்றே பொறுத்தருள்க.

முத்தி நாதன் : நன்று நவின்றனை! ஈண்டு அவருக்குச் சாத்திரத்தின் உண்மையை உபதேசிக்க வேண்டும் என்னும் பேரவா என் மனதில் எழுந்தது. அது நிலை கெடுதற்கு

முன்பே சென்று அன்னார்க்கு உண்மை ஞானத்தை உபதேசித்தருளல் வேண்டும். ஆதலால் தடுக்காது விடுமின்.

தத்தன் : தேவரீர் திருவுள்ளம் அதுவாயின் யான் கூறுவதும் ஒன்றுண்டோ? உட்சென்று எம் அரசரைக் கண்டு நும் உபதேசத்தை உரைத்தருள்க. (உள்ளே செல்லுகின்றார்) (துயின்ற மெய்ப்பொருளாரின் மனைவியார் அவரை எழுப்புகின்றார்.)

மெய்ப் பொருளார் : (நித்திரை விட்டெழுந்து) என்ன தவம் செய்தேன் கொல்? உலகமெல்லா மாக்கி உய்வித்துப் பாது காத்தருளும் உமை ஓர் பாகத்தமைந்த உயர்ந்தோனும் சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்தனுமாய அண்ணலார் அடியாராகிய தாங்கள் கால் கடுக்க இவ்வளவு தூரம் என்சிறு குடியிற் புகுந்து என்னை நாடி வருவதற்கு நான் எத்தனை நாள் பெருந்தவம் புரிந்தேனோ? திருநீறும், கண்டிகையும் சேர்த்தணிந்த ஒரு தனிப் பொருளாய் விளங்கும் உண்மையாளரின் அடித்தொண்டராகித் தாங்கள் என்னை நாடி இவ்வளவு தூரம் வந்தது ஏனோ? இதோ இவ்வாதனத்தில் அமரும். இறைவனாரது திருப்பதிகளையே மிதிக்கும் இப்பாதங்கள் இச் சிறுகுடியி லிருக்கும்படி இது செய்த புண்ணியம் யாதோ! மங்களம் பெருக மற்று என் வாழ்வந்தடைந்த தென்ன இங்கு வந்தருளப் பெற்றதென்கொலோ!

முத்தி நாதன் : அடியார் அன்பையே ஆதாரவாகக் கொண்ட அண்ணல், உன் இறை பணியும், இறை அன்பர் வணக்கமும் இப்பூவுலகிலுள்ள எல்லோரும் புகழ்ந்து பேசுகின்றனர். இந்நிலை கண்டான் இறைவன். தான் திருவாய்மலர்ந்தருளிய ஆகமத்தின் மெய்ப்பொருளை உனக்கு எங்ஙனமும் காணப்படாத தன்மையினாலே தனிமையில் உபதேசிக்க அருளிச் செய்தான். அப்பணியை மேற் கொண்டு உங்கள் நாயனார் முன்னுரைத்த ஆகமநூல் மண்மேல் எங்குமிலாத தொன்று இயம்பக் கொடுவந்தேன்.



மெய்ப்பொருளார்: நன்று! நன்று! இறைவனார் திருவாய் மலர்ந்தருளிய உண்மை ஆகமத்தின் தன்மையைத் தங்கள் போன்ற பெரியார் வாயில் கேட்டு மகிழ்வதைக் காட்டிலும் சிறந்த பேறு வேறு உண்டோ? எமது பிரான் அருள்செய்த இந்த மாறிலா ஆகமத்தை வாசித்து அருள் செய்தல் வேண்டும். வெள்ளெருக்கும், கரும்பாம்பும் பொன்மத்து மிலச்சி எமதுள்ளிருக்கும் பெருமானின் உயிர்த்தொண்ட நும்திருவாய் மலர்ந்தருள வேண்டுகின்றேன்.

முத்தி நாதன் : இவ்வாகமத்தின் பொருளை நீர் கேட்க வேண்டுவதுண்மையே. அந்த உபதேசம் பெறுதற்குத் தனிமையே சாலச் சிறந்தது. மாதரார் தம்மை நீக்கி மாபொருள் கேட்க வேண்டும். ஆதலால் நும் மனைவியாரை நீக்கி நீயும் நானும் வேறிடத்திருந்து ஞானமூர்த்தியின் மெய்ஆகமத்தை நான் நவில நீர் கேட்டல் நன்று.

மெய்ப்பொருள் : அவ்வாறாயின் இதோ என் மனைவியை அனுப்பி விடுகின்றேன். (மனைவியைப் பார்த்து) நங்காய்! நம்பன் அடியார் நவின்றதைக் கேட்டனை. உட்சென்று உன் தொழில் கவனி. நான் உபதேசம் பெற்று வருகின்றேன்.

அம்மையார் : தேவரீர் இட்ட திருக்கட்டளைக்கு மாறு கொள்ளாது நான் இப்பொழுதே உட்செல்கின்றேன். இறை அருள் புரிக. (முத்தி நாதனும் மெய்ப்பொருளாரும் தனித்திருத்தல்.)

மெய்ப்பொருளார் : தாண்டவக் கூத்தனின் தனித்த அன்பரே! இனி இறைவன் அருளிய ஆகமத்தை இயம்ப வேண்டுகின்றேன்.

முத்தி நாதன் : (தனிமையில்) ஆ! இவன் அடியா பக்தி இருந்தவாறென்னே. நாம் தனிமையில் அழைத்து வந்துவிட்டோம். இதுவே நம் எண்ணத்திற்கு ஏற்ற இடம் (மெய்ப்பொருளாரின் அருகிற் சென்று) (புத்தகக் கட்டை அவிழ்க்க நாயனார் பணிகின்றார். அப்பொழுது முத்திநாதன் உடைவாளால் குத்துகின்றான்.)

மெய்ப்பொருள் : மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் (கபடவேடத்தைக் கண்டு சந்தேகங்கொண்ட தத்தன் முத்திநாதன் உள்புகுந்தபோது மறைந்திருந்து உடனே எதிரில் ஓடி,)

தத்தன் : என்னே கொடுமை ! இறைவன் ஆகமத்தை உபதேசிக்கின்றேன் என்று கூறி உள்புகுந்து அரசனைத் தனியே பிரித்து இவ்வாறு கொன்ற இப்பாவியை இனி என் செயலாற்றுதும் எம் அண்ணல் மண்மீது மண்ணுயைச் சாய்ந்தனரே! ஹா! இதனினும் சிறந்த கொடுமை என் கண்ணில் காணப்போகின்றேனோ ! இல்லை ! இல்லை ! இப்பொழுதே இவனைக் கொன்று பழிக்குப்பழி தீர்ப்பேன். இறைவ உன்அருள் இருந்தவா றென்னே (முத்தி நாதனைத் தத்தன் வாளால் வெட்டப் போகின்றான்.)

மெய்ப்பொருள் : தத்தா! எமது உண்மைத் தோழா! நம் தில்லையம்பதியில் திருத்தாண்டகம் புரியும் எல்லை இல்லாத இன்பவாரிதியாய இமவான் மருமகனுடைய அடியானைக் காண்கின்றமையின் இவர் நம்மவர். இவர்க்கு ஒரு தீங்கும் செய்யற்க.

தத்தன் : (தனக்குள்) உண்மைப் பெரும் அடியாரது அன்பையே பூஷணமாகக் கொண்ட இவரது பெருமை எத்தகைத்தென்று அளவிடற்பாற்றே; தம் உயிர் நீங்கும் காலத்தும் இவர் ஓர் சிவனடியார் என்று எண்ணித் தம்மைக்



கொன்றவன் என்றும் கருதாது 'நம்மவன்' என்று நவின்றனரே. இவரது அடியார் பக்தியே பக்தி. (மெய்ப்பொருளிடம் வெளிப்படையாக) அண்ணலே ! நான் செய்ய வேண்டுவது யாது ?

மெய்ப்பொருளார் : அன்ப ! என் உயிர் நீக்கினார் என்று வெகுளற்க. பிறரும் இவரை வெகுளாதிருக்கச் செய்க. இவர் நம் நாடு கடந்து தாம் விரும்பும் இடம் செல்லும் வரையும் உடன் ஏகி நம் உற்றாராலும் பிறராலும் இவர்க்கு உறுதுயர் எய்தாதிருக்க உடன் இருந்து காத்து வழி விடுக. இதுவே நாம் அவருக்குச் செய்யத் தகும் பணி ! சீக்கிரம் விட்டுவருக.

தத்தன் : அப்படியே,

## அங்கம் 3

இடம் : சேதி நாட்டு வீதி.

நகரமாந்தர் : (தத்தன் முத்தி நாதனை வீதி வழியே அழைத்து வருகின்றான். கண்ட மாந்தர் கூறும் மொழிகள்.)

ஒருவர் : ஹா ! நம் இறைவனாது பொன்போன்ற உயிரைப் போக்குதற்குரிய மார்க்கம் செய்த புலி பசுத்தோல் போர்த்த தன்மைத்தாக கபட சந்நியாசி வேடம் பூண்டு இதோ செல்கின்ற இவனை என் செயலாற்றுதும்.

மற்றொருவன் : இக்கொடிய வஞ்சகனை நம் இறைவன் உயிரை மாய்த்தாற் போன்று மாய்த்து நம் பழிக்குப் பழி தீர்த்தல் நன்று.

மூன்றாவான் : அவனை அவ்வாறு கொன்றால் ஒழிய நம் குறை தீராது. இதோ என் வாளாலேயே வெட்டுகின்றேன் (எல்லோரும் முத்திநாதனை நெருங்குகின்றனர்.)

தத்தன் : நகர மாந்தரே ! நீங்கள் எல்லோரும் உடன்று எழுந்தது நன்றன்று. கொலைக்காரனேயாயிடினும், குன்

றெறிந்த குமரவேளின் தாதையானவனும், குன்றம் அமர்ந்தவனும், குன்ற மகளை ஒரு கூறாகக் கொண்டவனும் ஆகிய இறைவரது தொண்டராயினமையின் இவரைக் கொல்லலாகாதென்பது நம் அரசர் ஆணை. ஆதலால் அவ்வாணையின் படியே நம் நாட்டினின்று வெளியே போகும் வழியில் யாதொரு துன்பமும் இல்லாமல் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளேன். நீவிர் இவரை அணுகாது விலகுமின்.

குடிகள் : அரசர் உத்திரவு இவ்வாறாயின் நாங்கள் என் செய்யப் போகின்றோம். இறைவன் அருள் புரிக. நாங்கள் சென்று வருகின்றோம். (முத்தி நாதனும் தத்தனும் வெகுதூரம் சென்று தத்தன் திரும்புகின்றான்.)

## அங்கம் 4

இடம் : மெய்ப்பொருள் வீடு.

தத்தன் : எம்மையாளுடைய அண்ணலே! தங்கள் சொற்படி சிவனடியார்க்கு வழியில் நேர்ந்த துன்பங்களை எல்லாம் நீக்கிப் பாதுகாத்து வழிவிட்டேன். மெய்ப்பொருளார் மகிழ்ந்து அடியார் பேரன்பை ஆதரித்துப் பேசுகின்றார். சிவபெருமான் உமாதேவியோடு காக்ஷியருள மோக்ஷமடைகின்றார்.

# சாத்தனார் கோயில்கள்

[வை. சுந்தரேசவாண்டையார்]

தமிழ் மக்கள் தொன்று தொட்டு வழிபட்டு வருந் தெய்வங்களுள் சாத்தனாரும் ஒருவர். மகாசாத்திரன் என்ற பெயரே மாசாத்தன் என்று திரிந்தது என்பதும், இவர் பாசண்டமாகிய தொண்ணூற்றறுவகைச் சமயச் சாத்திரத் தருக்கக் கோவைகளிற் பயின்றவராதலால் பாசண்டச் சாத்தர் எனப்படுவரென்பதும் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரது கருத்தென்று புலப்படுகிறது. (சிலப். கனாத் - 14-15)

சாத்தனாருக்குக் கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. இக்காலத்தில் ஐயன் கோயில், ஐயனார்கோயில் என்ற பெயருடன் பலகோயில்கள் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் காணப்படுகின்றன. அவற்றுள் காப்பியக்குடி, பிடவூர் என்றவை சிறந்தவை. அப்பதிகள் யாண்டுள்ளன என ஆராய்வாம்.

சாத்தனாரைப் பற்றிய இனியவரலாறு ஒன்று ஐம்பெருந் தமிழ்க் காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. அது வருமாறு :—

முன்னொரு நாளில் மாலதி என்பாள் ஒரு பார்ப்பனி தனது மாற்றாள் குழந்தைக்குத் தன்பாலைச் சங்காலூட்ட அப்பால் விக்கிக் குழந்தை அவள் கையிலேயே இறந்தது. அதனால் மாலதி என்மாற்றாளும் கணவனும் என்மீது அடாப்பழி கூறுவரே! இதற்கு என் செய்வேன், என அஞ்சி அம்மகவை எடுத்துக் கொண்டு காவிரிப்பூம் பட்டினத்தே யிருந்த கற்பகக் கோட்டம், ஐராவதக்கோட்டம், பலதேவன் கோட்டம், சூரியன் கோட்டம், கைலாயக் கோட்டம், வச்சிரக்

கோட்டம், நிக்கந்தக் கோட்டம் முதலிய கோட்டங்களுக்குச் சென்று தன் துயரைத் தீர்க்குமாறு குறையிரந்தும் தீராமையினால் பாசண்டச்சாத்தனார் கோயிலிலே பாடுகிடந்தாள். அவ்வேளையில் சுடுகாட்டுக் கோட்டத்திருந்த இடுபிணம் தின்னும் இடாகினிப் பேய் இளங்கொடி போன்ற ஒரு பெண் வடிவாய் அணுகிப்பாடுகிடந்தாளை நோக்கி "ஒரு குற்றமு மற்றவளே, முற்பிறப்பில் தவஞ்செய்தில்லாதவருக்குத் தேவர்கள் வரங்கொடார். நீ பாடு கிடந்து பயனென்? எங்கே நின் குழந்தையைப்பார்ப்போம்" என்று வாங்கித் தன் வயிற்றினிலிட்டு மறைந்தது.

இறந்த சேயின் உடலையும் இழந்த மாலதியின் வருத்தங் காணப்பொறாத பாசண்டச் சாத்தனார் அவளை நோக்கி 'அன்னாய்' நீ செல்கின்ற வழி முன்னர்ப் பொதும்பரிடத்து அக்குழவி உயிரோடு கிடக்கின்றது. கண்டிலையோ? என அவள் அங்குச் சென்று பார்க்க அவர் குழந்தையாய்க் கிடந்தார்.

அவள் அக்குழவியை ஐயமின்றி எடுத்துச் சென்று தாய்கைக் கொடுத்தாள். அக்குழவியாகிய சாத்தனாரும் கல்வி கேள்விகளில் துறைபோய்த் தந்தை தாயிறந்த பின்னர் நீர்க்கடன் முதலிய செய்து தாயத்தாரொடு வெல்வழக்குரைத்து தேவந்தி என்னும் மனைவியோடு எட்டியாண்டு கூடி வாழ்ந்தார்.

பின் தம் மூவா இளநலத்தைத் தம் மனைவிக்குக் காட்டி உண்மையை உரைத்து அவள் குறிப்பினை அறிந்து அதற்கு ஏற்ப அவளுக்கு நீ எம்கோட்டத்துக்கு வாஎன அருளிச்செய்து, பிறர்க்கெல்லாம் "தீர்த்தத் துறை படிவேன்" என நீங்கினார்.



இங்ஙனம் மாயக்குழவியாகி வளர்ந்தது காப்பியக்குடி என்னும் பதியாகும் என்பது. "காப்பியத் தொல்குடிகவின் பெறவளர்ந்து" என்று சிலப்பதிகாரத்து வரந்தருகாதை 83-ஆம் வரியால் போதருகிறது. இந்தக் காப்பியக்குடி என்பது தஞ்சை சில்லாவில் சீகாழிக்கு மிக அண்மையில் உள்ளது. அங்கு சாத்தனார் கோயில் ஒன்று இன்றும் நின்று நிலவுகின்றது.

சாத்தனாரைப்பற்றிய மற்றும் ஒருவரலாறு திருத்தொண்டர்புராணத்து வெள்ளானைச் சருக்கத்தால் அறியலாகும்.

அஃதாவது:—

சேரமான் பெருமாணாயனார் அருளிச்செய்த திருக்கயிலாயத்தில் சிவபெருமான் திருமுன்பு விண்ணப்பித்த ஆதியுலாவை மாசாத்தனார் கேட்டறிந்து வந்தருளித் திருப்பிடவூரில் வெளிப்படுத்தினாரென்பது.

இதனை,

"சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தஅத் திருஉலாப் புறம்அன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா சாத்தனார் தரித்திந்தப்
பாரில்வேதியர் திருப்பிட வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கும்
நார வேலைசூழ் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே"

என்று பெரியபுராணம் வெள்ளானைச் சருக்கத்து 52-வது திருப்பாட்டுக் கூறும். *அத்திருப்பாட்டில் குறிப்பிடப்பட்ட பிடவூர் யாண்டுள்ளதென்னில் திருச்சிராப்பள்ளியிலிருந்து விருத்தாசலத்திற்குப் போகும் இருப்புப்பாதையில், பிட்சாண்டார் கோயில் ரயில் நிலையத்திலிறங்கி பிரம்ப

*சாத்தனாரைப்பற்றிய வேறொருவரலாறு அப்பர்தேவாரத்திற் காணப்படுகிறது. "பார்த்தனுக்கருளும் வைத்தார்...சாத்தனை மகனா வைத்தார்...திருப்பயற்றூரனாரே" (4-32-4) பத்திராசிரியர்.

ஊருக்குப் போகும் பெருவழியில் (Road) சிறுகனூருக்கு அண்மையிலிருக்கிறது.

பண்டைப் பெருமக்கள் பலர்தம் வரலாற்றுக் கருவூலமா யமைந்துள்ள புறநானூற்றின் 395-ஆம் பாட்டில்,

"செல்லா நல்லிசை யுறந்தைக் குணாது
நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூ
ரறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும"—வரிகள் 19 - 21

என்பதில் பாட்டுடைத் தலைவன் பெயர் சாத்தனென்று குறிக்கப் பட்டுள்ளது. அதன்கீக் குறிப்பிலும் "சோழநாட்டுப் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தன்" என்று அவன் பெயர் கூறப்பட்டிருக்கிறது.

அப்பாட்டுடைத் தலைவனுக்கு அவ்வூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மாசாத்தனார்பெயரே இடப்பட்டிருக்கலாமென்று தமிழ்த்தெய்வமன்ன மகாமகோபாத்தியாய, டாக்டர். ஐயர் அவர்கள் அப்பாடலின் கீழ்க்குறிப்பு எழுதியுள்ளார்கள். தம்மூரில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள தெய்வத்தின் பெயரைத் தம்மக்களுக்கு இடும் வழக்கம் பண்டும் இன்றும் தமிழ்மக்களிடத்திற் காரணப்படுவதொன்றேயாகும்.

இவ்வூர் இப்போது திருப்பட்டூர் எனவழங்கப்படுகிறது. ஈண்டுள்ள ஐயனார்கோயிலில், பலகல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. (ஐயனார்கோயில்களில் இஃதொன்றே கல்வெட்டுக்கள் அமையப்பெற்றதெனத் தோன்றுகின்றது) கல்வெட்டுக்களில் இவ்வூர் பிடவூர் நாட்டுப் பிடவூர் என்று காணப்படுகிறது.

மேற்கூறிய புறநானூற்றுச் செய்யுளில் "உறந்தைக் குணாது....பிடவூர்" என்று குறிப்பிட்டிருப்பதாலும், உறையூருக்குக் கிழக்கே வேறு பிடவூர் காணப்படாமையாலும் ஈண்டுக் கூறிய பிடவூரிலே ஐயனார்கோயில் சிறப்பாக இன்றும் விளங்குவதாலும் இதுவே மேற்கூறிய புறநானூற்றுச் செய்யுளிற் கூறப்பட்டதும் பெரியபுராணத்திற் கூறியாங்கு மாசாத்தனார் திருவுலாப்புறத்தை வெளியிடப் பகர்ந்ததும் ஆகிய பிடவூராகும் என்பது தேற்றமாம்.



இவ்வூர் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாண் பெருமக்கள் வாழிடமாயும், தேவாரவைப்புத்தலங்களில் ஒன்றாகியும், "பேரருளாளன் பிடவூரன்" என்று தேவாரத்திலும் பாராட்டப்பெற்ற தலைவனொருவன் வாழ்ந்ததாகியும் விளங்கும் சிறப்பமைந்ததாகும்.

வாகீசமுனிவர் அருளிச்செய்த

# ஞானுமிர்த மூலமும் விளக்க வுரையும்

[திரு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, திருவோத்தூர்]

ஞானுமிர்தம் என்னும் இவ்வரிய நூல், தன் பெயருக்கேற்ப ஞானவமுதமாய், சைவசித்தாந்த சமயவுண்மைகளைச் செவ்வனம் அறிதற்குப் பேருபகாரம் புரிவதாய் விளங்கி நிற்பது சைவவுலகு நன்கு அறிந்த செய்தியாகும்.

இந்நூலின் வரலாறும், பெருமையும், உரையும், உரைச் சிறப்பும் இனிது காட்டி, மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற்பரி சோதகராக விருந்த சேற்றூர், மகாவித்வான் ரா. சுப்பிரமணியக்கவிராயர் அவர்கள் முப்பத்தோர் யாண்டுகட்கு முன்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்து முதற்பிரசுரமாகப் பிரசுரித்தார்கள்.

இந்நூல் நடையும், நடைபற்றிச் செல்லும் உரைநடையும் தருக்கநெறியேநின்று பொருள்வகையுணர்த்திச் செல்லுவதால், தருக்கநெறிபயின்றோரன்றி மற்றையோர் எளிதில் உணரக்கூடிய நிலையில் இல்லாதிருப்பதைப் பலர் கூறக்கேட்டிருப்பதேயன்றி, யான், காலஞ் சென்ற சீகாழி. கோவிந்தசாமி ரெட்டியாரவர்கள் பால் சைவநூல் பயிலுங்கால் நேரே உணர்ந்தேன். இந்நிலையைச் சிறிதுமாற்றி, யாவரும் எளிதில் உணரும் நிலையில் அமைத்து வெளியிட வேண்டுமென்று யான் அவரை வேண்டினேன். அவர் "காக்கையர் சிற்பம்" என்ற நூலை வெளியிட்டதன் பயனால், இத்துறையில் கருத்தினைச் செலுத்தாராயினர்.

என்னோடு உடன்பயிலும் நண்பர் பலர் இந்நூற்கு ஒரு விளக்கவுரை எழுதிவெளியிடின் இது யாவர்க்கும் பயன்படும் என்று எனக்குக் கூறினர். அதனால், யானும் என் அறிவுக்கெட்டிய அளவில் ஆராய்ந்து விளக்கவுரை எழுதிய காலத்தில், எங்கள் திருவோத்தூருச்குச் சைவசமயப் பிரசாரத் தொண்டாற்றும் மாண்பினால் வந்த சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசியாரும், "சித்தாந்தம்" ஆசிரியரும்' தமிழ் வளர்ச்சியும், சமயவளர்ச்சியுமே தாம் கருதிப்புரியும் தொண்டாம் எனும் பெரும் பூட்கையினருமாகிய சைவத் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் " இதனைச் சிறிது சிறிதாக நம் "சித்தாந்தத்" தில் வெளியிடலாம்; நீங்கள் அனுப்புங்கள் " என்றார்கள் அல்லும் பகலும் சைவத்திருப்பணியே நினைத்தலும், செய்தலும் புரிந்துவரும் பெரியார் கருத்து அன்னதாதலை அறிந்துவைத்தும், தாழ்த்தல் என் நிலைமைக்கு ஆகாதெனக் கருதியும் இது போது வெளியிடுகின்றேன். அறிஞர்கள் ஆராய்ந்து தூய்மை செய்வார்களாக. இதுபோலும் அறிவுப்பணிக்கண் நின்று



மிழுலகின் நன்மை கருதி யுழைக்கும் திரு. முதலியாரவர்ட்குப் பரமன் எல்லா நலங்களும் இனிது அருளுவானாக.

பிறகுறிப்புக்களை நூல்முடிவில் வெளியிடுவேன். இந்ரலின் பழையவுரைப் பகுதிகள் தடித்தஎழுத்தில் அச்டப்பட்டுள்ளன.

## காப்பு வெண்பா

முக்கட் டிருகவுட்டு நால்வாய்த் தூகத்துச்
செக்கர்த் தடித்திடித்த செஞ்சடைத்துப்—பக்கத்துப்
பூதத் தருநடத்துப் பொற்பிற்றென் னுள்ளத்து
நாதத்து நின்ற நலம்.

காமிகாதி சைவாகமங்களுள் ஞானபாதத்துப் பதிபசு ாசவுண்மை அறிவுறுத்துவான் போந்த ஆசிரியர் ஆன்றோர் ுசாரம் பாதுகாத்தற் பொருட்டும், மாணாக்கர்க்கு அறிவுறுத்தற் பாருட்டும் இடையூறு நீக்குதற் குரிய விநாயகக்கடவுளை ாழ்த்துவாராயினர்.

ஈண்டுக் கூறிய காமிகாதி சைவாகமங்கள் காமிகம் முதாக வாதுளம் ஈறாகக்கூறப்படும் சிவாகமங்கள் இருபத்தெட்மாம். இவ்வாகமப்பொருள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ன நான்குவகையினையுடையதாய், சரியாபாதம், கிரியாபாதம் யாகபாதம், ஞானபாதம் என்னும் பெயரதாய்க் கூறப்படும். வற்றுள், ஞானபாதத்துள் பதி, பசு, பாசமாகிய முப்பொருள்களின் உண்மையுணர்த்தப்படுவதாகையால், "ஞான ாதத்துப் பதிபசு பாசவுண்மை" என விசேடித்தார். ஆயினும், ஞானபாதத்தின்கண், சில ஆகமங்கள் பொருள்வகை ழெனவும், சில ஆறெனவும், சில ஐந்தெனவும், சில நான்கெனவும், சில மூன்றெனவும் கூறுவனவாகலின், தொகை காடாமலும், பொருளொருமை கூறுமிடத்து, மூன்றென் றலே எல்லா ஆகமங்கட்கும் துணிபு என்பவாகலின், அம் மூன்றையும் விதந்தும், "பதிபசுபாசவுண்மை" யென்று கூறி

னர். இம்மூன்றன் இயல்பினையும் குற்றமறத் தெரிந்து மாணாக்கர்க் குணர்த்தும் மாண்புடைமையால், அவர்க்கோர் இடையூறும் உண்டாகாதாயினும், அறிந்தோர் அனைவரும் காப்பு முதலியன கூறும் வழக்கமுடையரென்னும் முறைமையினை மாணாக்கர் அறிதற்கு அது பிறழாவண்ணம் காட்டுதல் "ஆன்றோர் ஆசாரம்" எனப்பட்டது. இடையூறுநீக்கும் பரம்பொருளாதலின், "இடையூறு நீக்குதற்குரிய விநாயகக்கடவுள் என்றார். இச்செய்யுள் "நாதத்து நின்றநலம்" என்றதனால் வாழ்த்து, வணக்கம், பொருளியல்புரைத்தல் என்பவற்றுள் வாழ்த்தின்கண் நிறுத்தி, "வாழ்த்துவாராயினர்" என்றார்.

உரைநடை:—என் உள்ளத்தும் நாதத்தும் நின்ற நலம் முக்கட்டு. இருகவுட்டு. நால்வாய்த்து. உரகத்து. செஞ்சடைத்து. பக்கத்துப் பூதத்து. அருநடத்துப் பொற்பிற்று என்பது.

உரை :—எனது உள்ளத்திலும் நாததத்துவத்திலும் ஒப்பநின்ற நன்மையாகிய பொருள் மூன்று கண்களையுடையது; கவுள் இரண்டு உடையது; தொங்குகின்ற வாயினையுடையது; நாகத்தை ஆபரணமாக வுடையது; சிவந்த மின்னலையொக்கும் சிவந்த சடையினையுடையது; அருகில் பூதப்படைகளை யுடையது; அரிய நடனத்தின் பொற்பினையுடையது என்றவாறு.

நாததத்துவமாவது, உள்ளத்தாமரையின் சத்திதத்துவமாகிய பொகுட்டுவடிவிற்காணப்படும் ஐம்பத்தொருவீச வடிவாகிய சிவதத்துவம். நலம், ஆகுபெயர். முக்கட்டு, கவுட்டு முதலியவாய் நின்ற குறிப்பு முற்றுக்களை எச்சமாய் நிறுத்தி பொற்பிற்றென்னும் முற்றுவினைக்குறிப்போடு முடித்தலு



மாம். "ஆவயிற்குறிப்பே யாக்கமொடு வருமே" (தொல் சொல்) என்றவிடத்து "வருமே"யென்றது பெரும்பான்மை பற்றியென்பவாகலின், சிறுபான்மை ஆக்கமின்றியும் வருதல் கொள்க. உரகத்தது, பூதத்தது எனற்பாலன உரகத்து, பூதத்து எனநின்றன. செக்கர்த் தடித்து, சிவந்தமின்னல். இடித்தல், உவமப்பொருட்டு. "முக்கட்டிருகவுட்டு நால்வாய்த்து" என்பது சொல்முரண். பக்கத்துப் பூதத்து அருநடத்துப் பொற்பிற்று என்பதற்கு "பூதத்தின் அரிய நடனத்தைப் பக்கத்திற் பொருந்தும் பொலிவையுடைத்து எனினுமாம்" என்பது பழையவுரை. இவ்வுரைக்கண் பொருந்தும் என்பது அவாய் நிலையென்க. கவுள் கன்னம்.

உள்ளத்தின்கண் நிகழும் சவிகற்பவுணர்வுக்கேதுவாய் உயிரைச்செலுத்தும் சிறப்புப்பற்றி "நாதத்து" எனப்பிரித்துக் கூறினார். "செவ்வியவிந்துநாதம் சித்தமோடுள்ளமாகும்" (சி. சித்தி சு. 4-அதி. 1-2.) என்றார் பெரியாரும். அகரவுகர மகர விந்துக்களாய் அந்தக்கரணங்களைச் செலுத்தியது போல நாதமாய் உயிரைச் செலுத்துமாற்றிலும் வேறுபாடின்றி ஒப்பநிற்கும் இயைபுபற்றி "உள்ளத்தும் நாதத்தும் ஒப்பநின்ற நலம்" என்றார். நிரதிசயானந்தப் பரம்பொருளாய், நலந்தரும்பொருள் தன்னிற்பிறிதில்லை யெனநிற்றலின், "நலம்" என்றார். நலம் எனவே. இடையூறு நீங்குதலும் பெறப்படும். "செக்கர்த் தடித்திடித்த செஞ்சடைத்து" என்பதற்கு, "விலகி வில்லுமிழ்தலால் சிவந்த மின்னையும் தோற்கும்படி செய்த சிவந்த சடையினையுடைத்து" என்பர் பழைய வுரைகாரர். செஞ்சடைத்து எனவே, படை செம்மை நிறத்ததாதல் பெறப்படினும் அதன் ஒளியுடைமை எய்த செக்கர்த் தடித்து என்ற உவமை கூறப்பட்டதென அறிக.

# ஞானபாதம்

## பாயிரம்

### கடவுள் வாழ்த்து

**ஆசிரியப்பா**

வெண்டிரைக் கருங்கட லேழும் விண்டொட
வீங்கிய சென்னிச் சிமயமும் ஓங்கிய
எழிரும் பொழிலும் எண்ணீங் குயிரும்
அளவில் அண்டமும் உளையின்றி வருத்தம்
மலரோன் தாதையை வருத்தும் தளரா
முன்னோ ரில்லா முன்னோன் ; பின்னும்
இளமையும் அஃதா இயைந்தோன் ; வளமலி
தோற்றம் ஈறொன்றில்லோன் ; கூற்றுக்
கிளியேமுற்ற வொளிமாள் திருநகை
அருளினங்குழை பரப்பி இருள்தீர்
கருணைமாநனை உயிர் ஞிமிறருந்த
மலர்ந்த மாதர் மரகத வல்லி
அந்திவானத் தணிநிறம் கவர்ந்து
சிந்தை செல்லாச் செழுங்கிரி யொருபால்
வளங் கொளப் படர்ந்த வண்ணம் போல
அறவோள் அமர்ந்த பாகன்; துறவோர்க்
கெல்லையாகிய தொல்லோன் தனது
பாமாண் சேவடி பரவ
நாமாண் புளதாம் நலங் கொளச் சிறந்தே.

இது கடவுள் வாழ்த்து. இதன் கண். "வெண்டிரைக் ருங்கடல்" (1) என்பதுமுதல் "முன்னோன்" (6) என்பது ரையில் ஒருதொடர்; "பின்னும்" (6) என்பதுமுதல் இயைந்தோன்" (7) என்பதுவரை ஒருதொடர்; "வளமலி" ) என்பதுமுதல் "இல்லோன்" (8) என்பதுவரை ஒரு



தொடர்; "கூற்று" (8)என்பது முதல் "அறவோள் அமர்ந்த பாகன்" (16)என்பது வரை ஒருதொடர் ; "துறவோர்க்" (16) என்பதுமுதல் "தொல்லோன்" (17)என்பதுவரை ஒருதொடர்; "தனது" (17) என்பதுமுதல் "நலங்கொளச் சிறந்தே" (19) என்பது வரை ஒருதொடர்.

# பாடுவித்த நாயகன்

[உதவிப் பத்திராசிரியர்]

(மலர் - ௮, இதழ் - ௬, ௩௦௪-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவனே இராவணன் முதலான வேடங்களைப் பூண்பானாயினும் தன்றன்மை வேறுபட்டு எக்காலும் இராவணனாதி வேடத்தோடு விகாரியாய்த்தோன்றுவதில்லை. இதைஅறியின், சிவன் சத்தியுடன் தோன்றுங் காலத்தே தன்றன்மை வேறுபட்டு விகாரப்படான் என்பது அறியப்படும். அன்றியும், சிவன் தோன்றுங்கால் எல்லாம் அருட்சத்தியிடமாகவே தோன்றுவான். அன்றித் தானாக வேறு தோன்றுதலில்லை என்பது "முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்கும்; தான் முளையான் அன்றே" என்ற சித்தியார் முதற் சூத்திர மூன்றாம் அதிகரண 68-ஆஞ் செய்யுட் பகுதியால் அறியப்படும்.

அவன் அங்ஙனம் தோன்றுவது கருணை காரணமாக என்க. "கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு" அது என்பதை மணிவாசகப் பெம்மானார் பல இடங்களில் பகர்ந்திருக்கின்றார். அவற்றுட் சில இவை :—

i. தாயுற்று வந்து என்னை ஆண்டுகொண்ட
தன் கருணைத் தேயுற்ற செல்வன். **(திருக்கோத்தும்பி)**

ii. வண்ணப் பணித்து என்னை வா
என்ற வான் கருணை. (ஷை)

iii. வான் கருணை வெள்ளப் பிரான். (ஷ)

மேலும், அவன் அண்டமுற நின்றதுவும், கங்கையைச் சடையில் தரித்ததும், ஆலகாலத்தை உண்டதும் கருணை காரணமாகவே என்பதனைத் "திருச்சாழ"லில் அருமையாக எடுத்துக் காட்டியுள்ளார். எனவே, அருளே உருவாய்த் திகழும் அரன் தாயுற்று வந்தே நம்மை ஆட்கொள்வன் என்பதனை வலியுறுத்தவே, "தாயான ஈசன்" என்று நயம்பட மொழிந்தார்.

இதன்கண் இன்னொரு நயமுங் காணக் கிடக்கின்றது. இறைவனென்பவன் இறைமைக் குணங்கள் எல்லாம் பொருந்தி நியாயம் தவறாது ஒருபக்கம் சாயாது குற்றத்துக்கு ஏற்ற தண்டத்தையும் குணத்துக்கு ஏற்ற பரிசிலையும் தருபவன். அவன் எக்காலும் இறைமைக் குணம் ஒன்றே உடையவனாய் நின்றால் உலகில் உள்ள உயிர்கள் உய்தி பெறுமாறு இல்லவேயில்லை. அதனால்தான் அவன் சிற்சில சமயத்தில் இறைவிக் குணத்தோடும் தோன்றுகின்றான். அவ் இறைவிக் குணம் என்பதுதான் கருணை. இறைவனது சிறந்த பெற்றி நியாயமேயாயின், இறைவியது சிறந்த பெற்றி கருணையே ஆகும். நியாயமும் கருணையும் அழகுற ஒன்றியக்காலே உலகு சரிவர நடைபெறும். இந்த நியாயம் இவ்வுலகுக்கும் இறைவனது உலகுக்கும் ஏற்கும். அதனாற்றான் அவன் தாயாக வந்து நம்மைப் பணிகொள்வது என்க. தாயாய்த் தோன்றுகின்றமையால் நம் பிழையனைத்தையும் பொறுத்து, தகப்பனாயும் இருக்கின்றமையால் நம் கோதைக் களைந்து நன்னெறியிற் செலுத்தி வருகின்றான் என்க.

அந்தத் தாயான ஈசன் நம்மை ஆட்கொண்டு அருளியவுடனே நமது பிறப்பிறப்புப் போய் நாம் பல்லோரும் ஏத்துமாறு சிவனடிக்கீழ்ப் போய் இறுமாந்திருப்போம். அந்த இறுமாப்பு இனிக்கும் இறுமாப்பு. தேனினும் இனிய அடியைச் சார்தலால் வரும் இறுமாப்பு. எக்காலும் நிலைபெறும் இறுமாப்பு. அவ் இறுமாப்புப் பெறுவது பெரிதா? கண நேரம் மணிநேரம் நின்றோடும் இறுமாப்புப் பெறுவது பெரிதா? எது தக்கது? எது தகாதது? இவற்றையெல்லாம் சீர்தூக்கி ஆய்ந்து ஆய்ந்து மணிவாசகனார் ஆதியும் அந்தமும் ஆகிய ஈசனடிக்கே அன்பு செய்யுமாறு மக்கள் எல்லாரையும் பணித்துள்ளார். அதுவே "தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்ற அடியின் கருத்து என்க. எனவே, இறைவன் எத் தன்மையன் என்பதும், மக்கள் எத்தன்மையர் என்பதும், எவன் எவரை ஆட்டுவிக்கின்றான் என்பதும், நீங்கலாகாப் பேரின்பம் தரத்தக்கவன் யாவன் என்பதும் ஈண்டு எடுத்துக்கொண்ட தலையங்கத்தின் கீழே மணிவாசகப் பெருமானார் சொற்கொண்டு காட்டப்பட்டவாறு அறிக.



# திருக்குறள் விளக்க ஆசிரியர்

[பத்திராசிரியர்]

நமது சமாஜத்தில் இருபத்துமூன்று ஆண்டுகளாகப் பணி புரிந்தவரும், திருக்குறள், திருக்கோவையார், சிவஞான சித்தியார் முதலிய நூல்களைப் பாடமாகப் பலமுறை நடத்திய ஆசிரியரும், எமது சிறந்த நண்பருள் ஒருவருமாகிய சைவத் திருவாளர் - கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் 1-5-1935 முதல் நீரிழிவினால் ஏற்பட்ட கட்டியால் (Diabetic carbuncle) வருந்தித் தமது அறுபத்தாறாம் வயதில் 15-6-1935 இரவு $1\frac{1}{4}$-மணிக்குச் சிவபதமடைந்த செய்தியை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். இப் பெரியார் பச்சையப்பன் பாடசாலைத் தமிழாசிரியர் ஆனார்

சிங்காரவேல் முதலியாரிடம் தமிழும் சைவ நூல்களும் கற்று இராயப்பேட்டை வெஸ்லிகாலேஜில் சிலகாலம் தமிழ்ப் பண்டிதராக விருந்து பிறகு சென்னையில் பிரபல நகை வியாபாரிகளாகிய மெஸர்ஸ். பி. ஆர். அண்டு சன்ஸ் கம்பெனியில்



ஏறக்குறைய முப்பத்தாறு ஆண்டுகள் உத்தியோகத்திலிருந்து பத்து வருஷங்களாக ஓய்வும் உபகாரச் சம்பளமும் பெற்று வந்தார். இவ்வோய்வில் சிறிது காலம் இராணிமேரிக்கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகவும் பணி புரிந்தார்.



சென்னைக் கஸ்டம்ஸ் கலெக்டர் ஆபீசிலும், போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஆபீசிலும் முறையாகத் திருக்குறள், திருக்கோவையார், இறையனாரகப் பொருள் முதலிய நூல்களைப் பாடமாகச் சொல்லிவைத்துத் திருமயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் திருக்குறளைப் பாடமாக நடத்திச் சுமார் ஆறு வருஷங்களில் முடித்தார். திவான்பகதூர் ஸர். டி. என். சிவஞானம்பிள்ளையவர்கள், திவான்பகதூர் பி. சுப்பையா முதலியாரவர்கள் முதலிய பேரறிஞர்கட்குச் சிலகாலம் தேவாரம், திருக்குறள் சிவஞானபோதம் முதலிய நூல்களை இவர் ஆசிரியராக விருந்து பாடம் சொல்லிவைத்தனர். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் மூலத்தையும் திருக்குறள் விளக்கவுரை, தொகுப்புரை என்ற நூல்களையும் வேறு பல சிறு நூல்களையும் இவர் வெளியிட்டனர்.

நமது சமாஜத்தில் 1912 முதல் 1917 வரையில் காரியதரிசியாகவும், 1919—1920-ல் பத்திராசிரியராகவும், 1-11-1929 முதல் 31-12-1930 வரையில் உதவிப் பத்திராசிரியராகவும், பிறகு இரண்டாண்டுகள் கணித பரிசோதராகவும் பணி புரிந்து, 1924ஆம் ஜனவரி முதல் 1926ஆம் மே வரையில் சிவஞானசித்தியார் சுபக்கத்தை வாரத்துக்கொரு முறை பாடமாக நடத்திப் பிறகு 1929ஆம் ஜனவரி முதல் அக்டோபர் வரை சிவஞானபோதத்தையும் பாடமாக நடத்தினார். பல ஆண்டு விழாக்களிலும் மகாநாடுகளிலும் பற்பல கூட்டங்களிலும் இவர் சொற்பொழிவுகள் செய்வதோடமையாது திருவிழாக் காலங்களிலும் கூடுகின்ற மக்களுக்கு இவர் சமயபோதனை செய்து சமாஜத்துக்கு உதவி புரிவது வழக்கம்.

திரு. முதலியாரவர்கள் திருக்குறள் மூலத்தையும் பரிமேலழகர் உரையையும் மிக நன்றாகப் பயின்றவர். சைவசித்தாந்த நெறியில் அழுந்திய பற்றுடையவர். இக்காலத்துக்கேற்ற முறையிலும் சீர்திருத்தக் கருத்துக்களைத் தழுவியும் எவரேனும் எழுதவோ பேசவோ நேரிடில் உடனே அவர் மீது சீற்றங் கொள்வது இவரது இயல்பு. இதனால் நமது சமாஜத்தோடு நெருங்கிய தொடர்புடைய பல நண்பர்க

ளுடைய கூட்டுறவை இவர் பெறுமற் போக நேரிட்டது. இதனால் சமாஜ வளர்ச்சியும் சில காலம் தடைப்பட்டது. தம்மாலியன்றவரையில் எவ்விதக் கைம்மாறும் கருதாது தமிழுக்கும் சைவத்துக்கும் உழைக்கும் சிறப்பு இவரிடம் போற்றற்குரிய பண்பாக இருந்தது. திருக்குறள் பிரசாரத்தில் இவருக்கு அளவு கடந்த ஆர்வமுண்டு. எந்தப் பொருள்பற்றிப் பேச நேரிடினும் பல குறட்பாக்களை விரித்துரைத்தே இவர் சொற்பொழிவு செய்வது வழக்கம். இவரது ஆன்மா இறைவன் திருவடியில் ஆறுதலடைவதாக.

# விநாயகமூர்த்த தத்துவார்த்தம்

[கண்டாச்சிபுரம் - திரு. ச. இராமலிங்க முதலியாரவர்கள்]

“நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்”

உலகத்திலே, எல்லா மதங்களும் கடவுள் ஒருவர் உண்டென்பதை ஒப்புக் கொள்ளுகின்றன. இவ் வுலகுக்கெல்லாம் கடவுள் ஒருவரே. அவரை யறிய மார்க்கம் பல.

“யாதொரு தெய்வங் கண்டீ ரத்தெய்வ மாகி யங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்”

என்பது நமது பண்டைப் பெரியோர் கொண்ட முடிபு. மனவாக்கினுக் கெட்டாத சமயாதீதப் பரம்பொருள் அருவம் உருவம் அருவுருவமாக உள்ளதென்பர். அன்றி, பல கடவுள் உளர் எனக் கூறுவார், அறிவுடை மக்களில் எவருமிலர். சைவம், வைணவ முதலிய உட்சமயங்களிலே பல கடவுள் மூர்த்தங்கள் காணப்படுகின்றனவே. பல மூர்த்தங்களையும் வழிபாடு செய்கின்றார்களே! கடவுள் ஒருவரா? பலரா? என்ற ஆசங்கை நிகழலாம்.

“தெய்வம், ஒருவனே யென்று வுணரவல்லீரேல்
அருவினைக ளோந்து மறும்”



என்பது நம் ஔவைப்பிராட்டியாரின் அமுதவாக்கு. பொன் ஒன்றே பணி பல என்பது போன்று, கடவுள் சர்வசக்தி யுடையவராதலால், அன்பர்கள் யார் யார் எவ்வித பக்தியோடு எந்தெந்த விதமாய்த் தம்மைப் பாவனைசெய்து வழிபடுகின்றார்களோ, அந்தந்த மூர்த்தமாகவே அவர்களுக்குக் காட்சியளிக்கின்றனர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவார்த்தத்தையும், இறைவனின் எண்குணம் செயல் முதலிய சூக்கும கருத்துக்களையுந் தன்னுள்ளடக்கிக்கொண்டிருக்கின்றன. ஆழ்ந்த கருத்துடன் ஊன்றிப் பார்த்தறியும் நுண்ணறிவாளர்க்கே இது புலனாகும். பேரிறைவராகிய சிவபரம் பொருளின் அருட்டிரு மூர்த்தங்கள் பல. அவைகளுள் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரக் கடவுளாகிய விநாயக மூர்த்தத்தின் தத்துவம் வருமாறு :—

விநாயகர் என்னும் திருநாமத்தானே, மேலானவர் என்பது மிக விளக்கமாக அறியக் கிடக்கின்றது. சிவபெருமானின் வேறாகாத ‘ஓம்’ என்னும் மகாமநுவினின்றும் பூதாங்கம், வேதாங்கம், மிருகாங்கம் என்னும் மூன்றங்கங்களுடன் பிரணவ சொரூபியாய், யானைமுக வடிவுடன் தேவர் துயரகற்றுவான், கஜமுக சூரசம்மார நிமித்தந் தோன்றினர் என்பது சரிதம்.

விநாயகர் என்னுந் திருநாமத்திற்கு, அறிவுடைப் பெருமக்கள் கூறும் பொருள்களாவன :—

1. வி - மேலான, நாயகர் - தலைவர்.

2. வி - கல்வி, நாயகர் - தலைவர், சகல கலைகளுக்கும் தலைமை பூண்டவர் தன்னை யடைந்தார்க்கு கல்வியை எளிதிலளிக்க வல்லவர். இங்கு பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்கு அருளினமையும் பிறவும் கண்டு தெளிக.

3. வி - திசை, நாயகர் - தலைவர் எனக் கொண்டு எத்திசைக்கும் தலைவர்.

4. வி - கண்போன்ற, நாயகர் - தலைவர் கண்ணிற் சிறந்த வுறுப்பின்மை போலத் தம்மிற் சிறந்த தலைவர் இல்லாதவர்.

5. வி - அறிவு, நாயகர் - தலைவர் (மேன்மையுற்றவர்) ஞான சொரூபி.

"விக்கினவிநாயகர், விக்கினராசர்" என்னுந் திருநாமங்களும் "சர்வவிக்நோபசாந்தயே" என்னு மந்திரமும், தம்மை வழிபடுமடியவர்களின் இடர்களைக் களைபவரென்பதை வலியுறுத்தும்.

பிரணவ மகா மந்திரத்தினின்றும் சகளீகரித்து, சிவன் சத்தி யென்னும் இவ்விருவரது அம்சமாய்த் தோன்றினமையின், இவர் பிரணவசொரூபர். இவவுலகமோ வட்ட வடிவு, அண்ட வடிவு அதாவது பிரணவ வடிவு. பிரணவமோ யானை வடிவு. அவ்வடிவோ விநாயகர் வடிவு. எனவே, இவ்வுலகமெல்லாந் தாமே யென்பதும், தாமே யுலகமென்பதும் பெறப்படுகின்றது. தாமே உலக வடிவாயும், பிராணவ சொருபராயும் விளங்குதலை உணர்த்தவே, யானை வடிவை ஏற்றனரென்ப. திரிநேத்திரங்களைக் கொண்டதினால், ஆதித்தன், சந்திரன், வன்னி முச்சுடர்களையுங் கண்களாகக் கொண்டு அவைகளுக்கு ஒளிகொடுத்து நிற்பவர் என்பது புலனும். காயத்திரி மகா மந்திரத்தின் மூன்று பாதங்களின் பொருளா யிருப்பவர் தாமே யென்பதும், இதனால் வெளியாகின்றது. விசாலமான செவியை (முறம்போன்ற காதுகளை) உடையவரா யிருத்தல் நிர்வதி சர்வக்ஞத்துவ என்பதை யுணர்த்தும். ஐந்து கரங்கொண்டமையானது, சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரஹம் என்னும் பஞ்சகிருத்தியபதி தாமே யென்பதையும், வரம்பிலாற்றலுடையவ ரென்பதையுங் காட்டா நிற்கும். ஒற்றைக்கொம்பு பரஞானபதி தாமொருவரே யென்பதையும், ஒடித்தகொம்பு அபயப்பிரதான முடையவரென்பதையும் தெரிவிக்கின்றன. கயமுகாசூரனை சம்ஹரித்துத் தேவர்களை இரக்ஷித்தமையே இதற்கோர் சான்றுமென்க. விநாயகர் திருமுகம் ஒருபக்கம் தந்தமாதிய கொம்பு காணப்படுதலின் ஆண் வடிவென்றும், மற்றொரு பக்கம் அத் தந்தம் காணப்படாமையின் பெண் வடிவென்றுங் காட்டி, ஆண்பாலா? பெண்பாலா? என்றையுறுவார்க்கு, எப்பாலுங் கடந்த அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் ஒரு தனிப்பெருந் தலை



வர் தாமே யென்பதையு முணர்த்தும். கன்னமதம், கபோலமதம், பீஜமதமென்னும் மும்மதங்களை யுடையவராதலால், இச்சா ஞானக்கிரியைகளையும் சத்து சித்து ஆநந்தம்) சச்சிதானந்தத்தையும் உடையரென்பது தெளிவாகின்றது. சடைமுடி தரித்தலினால், வேதாந்தப்பொருள் தாமே யென்பதும் யோகியர்களால் நித்தியமுந் தியானிக்கப்படுபவர் தாமே யென்பதும் தெரியக் கிடக்கின்றன. பாலசந்திரனை வேணியில் தரித்திருப்பது, உண்மையடியவரை உயர்நிலைக் குய்ப்பவரென்பதையும், சர்வக்ஞத்துவர் என்பதையும் குறிப்பிடுகின்றது. உபவீதந் தரித்தமையானது, பரப்பிர்மமாகி எங்கும் நிறைந்த வன்னி தாமேயென்பதையும், பிராமணர்தாமே யென்பதையும் புலப்படுத்துகின்றது. சர்ப்பாபரணமோ பாம்பு வடிவமாகிய குண்டலி சத்தியையுணர்த்தி, அவற்றின் விரிவு சுருக்கங்களே பிரபஞ்ச ஒடுக்கத் தோற்றத்தைக் காட்டுக்குறியாய் ஜகத்காரண பூதரென்பதை யுணர்த்துகின்றது. துதிக்கையானது, அணுவுக்ணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் விளங்கத்தக்கவ ரென்பதைக் காட்டுகின்றது. லம்போதரமுடைமையானது, சர்வ ஜீவோற்பத்திக்கும் கர்ப்பதானமாயுள்ளவர் தாமே யென்பதைக் குறிப்பிடுகின்றது. அறுகு சூடியது சர்வாந்தர்யாமி தாமே யென்பதையும், மலப்பிணியைத் தணிப்பவர் தாமே யென்பதையும் விளக்குகின்றது. மோதகமேந்தியது, உலகமும் அதிலுள்ள சேதனா சேதனங்களும் தன்னிடத்தடங்கியதே யென்பதைத் தெரிவிக்கின்றது. மூஷிகவாகனங்கொண்டமையானது - வண்ணம் வடிவுங் காட்டாப் பேரிருளாகிய ஆணவமே, ஈண்டு வண்ணமும் வடிவுங் காட்டி மூஷிகமாய்ப் பிரணவ மூர்த்தியினடிக் கீழமூந்தி வாகனமாய் வலிகெட்டு நின்றது என்பதை யுணர்த்துகின்றது. ஒடிந்த கொம்பைத் தமது கையிலேந்தியிருக்கும் தோற்றம், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன கர்த்தா தாமென்பதையும், பாரதக்கதையை மேருமலையின்மீது வரைந்தருளிய சரித்திரத்தையும் ஞாபகப்படுத்துகின்றது. விநாயகமூர்த்தியின் திருவருளின்றி, எக்காரியமும் நிர்விக்கினமாக முற்றுப்பெறு

தென்பதே, வேதாகம புராணங்களின் துணிபு. அப்பெருமானை மெய்யன்போடு வழிபடுவோர், கல்விசெல்வம் சற்புத்திரப்பேறு தீர்க்காயுசு, சத்துரு ஜயம், இராஜ வசியம் முதலிய சர்வாபீஷ்டங்களும் பெறுவாரென்பது திண்ணம். இம்மூர்த்தியின் மகிமையாதியனவும், பூஜாக்கிரம விரதானுஷ்டானங்களும், பிறவும் பார்க்கவபுராண மென்னும் விநாயக புராணத்திற் காண்க.

—"சிவநேசன்"

# "நாம் யார்?"

அல்லும் பகலும் லௌகிக விடயங்களிலேயே மனதைச் செலுத்தி உண்மைக்குச் சேய்மையில் நிற்கும் நம்மனோரிற் பெரும்பாலோர்க்கு "நாம் யார்" என்னும் இக்கேள்வி சிந்தித்தற்கிடந் தருகின்றது.

சிலர் 'இதுவென்ன பழங்கதையாயிற்றே. தம் மதம் நிறுத்தற்புகும் சமயநூல் வல்லார் யாவரும் இதைப்பற்றித் தானே பேசியிருக்கின்றார்கள்' என்று கருதக்கூடும். "நாம் யார்?" என்னவே சிலர் 'நாம் மக்கள்' என்றும், சிலர் "நாம் பெற்றோரின் பிள்ளைகள்" என்றும் நகைச்சுவை ததும்பப் பதில் கூறி அமைதல் கூடும்.

ஆனால் இன்றோ மற்றென்றோ ஒவ்வொருவரும் இக்கேள்வியைத் தம்முள்ளே வினவவும், அதுபற்றி ஆராயவும், ஆராய்ந்து அநுபவ வாயிலாக அறியவும் வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், வீடுபேற்றிற் கின்றியமையாத சாதனம் அதுவே யாம் 'தன்னை யறிந்தாற் றலைவனை யறியலாம்' என்பது பெரியோர் வாக்குமாதலின்.



## உடலா?

நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பூதங்களாலாய இவ்வுடல்தானோ நாமென்னின், நாம் உறக்கத்திலிருக்குங்கால் அறிவு நிகழக் காண்கின்றோமில்லை. மேலும் உடல் பிரேதமாய்க் கிடக்கும்போது உடலுக்கென ஓர் அறிவு நிகழக் காண்கின்றோமில்லை. ஆகவே, உடம்பு அறியமாட்டாது என்பது பிரத்தியக்ஷம். ஆனால், நாம் அறியுந்தன்மையுள்ளேம்; அறியுந்தன்மையுள்ள நாம் உடலாதல் ஒருபோதும் சாலாது. எனவே, நாம் உடலின் வேறான ஒரு விழுப்பொருள் என்பது வெள்ளிடைமலையாம்.

## ஐம்பொறிகளா?

இனி, உடலிலுள்ள மெய், வாய், கண், மூக்குச் செவியாகிய ஐம்பொறிகளையும் அடிப்படையாகக் கொண்டு எழும் ஐம்புலன்கள்தாம் நாமோவெனின், அவை தாமும் உறக்கத்தின்கண் விடயங்களை அறியமாட்டாவாகின்றன. நாம் உறங்குங்கால், அவை ஒடுங்கி நிற்கின்றன. ஆனால், நாம் விழித்திருக்குங்கால், அவை ஒவ்வொரு பொறியாக விடயத்தை அறிகின்றன வென்றாலோவெனின், அற்றன்று. என்னை? அவை ஒன்றையொன்று அறியமாட்டா. நா ருசியை அறியுமேயன்றி இன்னிசைக் கீதத்தை அறியமாட்டாது. அவ்வாறே, நறுமணத்தை மூக்கே முகருமன்றிக் கண் அதனை அறியாது. ஆகவே, மெய் வாய் கண் மூக்குச் செவியாதியவற்றைக்கொண்டு விடயங்களை அறியும் நாம் இவற்றினும் வேறாவோம் என்பதும் வெளிப்படை.

## பிராண வாயுவா?

இவ்வைம்பொறிகளையும் கொண்டு விடயங்களை அறியக் கூடியது பிராணவாயுவாகலின், நாம் பிராணவாயுவோவெனின், நாம் அதுவுமன்று. என்னை, உடம்பு உறங்குமிடத்துப் பிராணவாயு இயங்கினும் விடயங்களை அறியமுடியாதாதலினென்க. ஆகவே, பிராணவாயுவை அடக்கியும் விட்டும் நிற்கும் யாமதனினும் வேறாவோம் என்பது தேற்றம்.

**தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்**
**தன்னுணரத் தன்னுள் இருத்தலால்—தன்னுணரு**
**நேசத்தர் தம்பால் நிகழும் ததிநெய்போல்**
**பாசத்தார்க் கின்றாம் பதி.**

உ—திருவேடத்தின் இறைவன் பிரகாசமாய் நிற்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

பதி - அசிந்திதனாய்நின்ற பரம்பொருள்,—தன் உணரவேண்டி - உலகத்துள்ளார் தன்னை யறிதற்பொருட்டு,—தனது உருவைத்தான் கொடுத்து - திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருவடிவத்தைத் தன்னன்பர்க்குக் கொடுத்தலானும்,—தன் உணர - அவ்வன்பர் தன்னைச்சிவோகம்பாவனையால் அறியச்செய்தலானும்,—தன்னுள் இருத்தலால் - அங்ஙனம் ஒரு குறியின்கணின்றுணருமவரைத் தனது வியாபகத்துள்ளாக இருத்துதலானும்,—தன் உணரும் நேசத்தர் தம்பால் ததிநெய்போல் நிகழும் - குறியுமிறந்து நின்று தன்னையுள்ளவா றுணருமவர்மாட்டுத் தயிரின்கண்ணதாகிய நெய் போல விளங்கித் தோன்றும்,—பாசத்தார்க்கு இன்று ஆம் - அவ்வியல்பில்லாத பாசக்கட்டுடையார்மாட்டுப் பாலின்கண்ணதாகிய நெய்போல விளங்காது நிற்கும்.

கொடுத்துச் செய்திருத்தலானிகழுமென வினையும். உணர்தலை மூவிடத்தோதுதலின் இஃதங்ஙனம் வேறுவேறுரைக்கப்பட்டது.

**கண்டதொரு மந்திரத்தால் காட்டத்தின் அங்கிவே(று)**
**உண்டல்போல் நின்றங் குளதாமால்—கண்டவுருத்**
**தானதுவாய் அன்றானான் தானதுவாய்த் தோன்றானே**
**தானதுவாய்க் காணும் தவர்க்கு.**

உ—சங்கமவடிவிற்குக் கூறிப்போந்த இயல்பில்லாத தாவரவடிவின் மந்திரசாந்நித்திய முள்வழியன்றிப் பிரகாசமாய் நிற்றல் பெறப்படாதென்பாரை நோக்கிச் சிவாலயத்தினிடத்தும் இறைவன் பிரகாசமாய் நிற்றலை வலியுறுத்துதனுதலிற்று.

காட்டத்தின் அங்கி வேறு உண்டல்போல் - விறகிற்றீ கடைகோலாற் கடைந்துழி வேறாய் விளங்கும் அல்லுழி விளங்குவதன்றானாற்போல,—கண்ட உருத் தான் அது ஆய் அன்று ஆனான் - உயிர்



கட்குப்புத்தி முத்தி யளித்தற்பொருட்டுக் காணப்பட்ட தாவரவடிவின்கட் கலப்பினால் அதுவே தானாய் அதுவன்றி வேறு பொருளுமாமியல்புடைய முதல்வன்,—கண்டது ஒரு மந்திரத்தான் நின்று அங்கு உளது ஆம் ஆல் - அதுவே தானாகக் காணாதார்க்குத் தம்மாலறியப்பட்டதொரு மந்திரசாந்நித்தியமில்வழி அவ்வடிவின்கண் விளங்காது நின்று அஃதுள்வழி விளங்கித்தோன்றும் பொருளாம்.—அது தான் ஆய்க் காணும் தவர்க்கு அது தான் ஆய்த்தோன்றானே - அவ்வாறன்றி அவ்வடிவே அவனாகக் காணப்பெறும் உண்மைத்தவமுடையார்க்கு அப்பெற்றியனேயாய் விளங்கித் தோன்றான் கொல்லோ.

தானதுவாயன்றானானென்னும் பெயரடையான் அவரவர் பாவனைக்கேற்ப விளங்குதற்கேதுக்கூறியது. தானதுவாயன்றாதல் சங்கமவடிவிற்குமொக்குமேனும், தாவரவடிவின்கண் நிகழுங்கடாவை இதனானன்றி நீக்கலாகாமையின் ஈண்டுக் கூறினார். இஃதீரிடத்துமொக்குமென்பது முன்னர்ப்பெறப்படும்.

---

## புறனடை

இனி இவ்விடங்களின் வழிபடுகவென்றது.

**மே**—மேற்கூறிப் போந்த மூன்றுஞ் சீவன்முத்தர்க்குத் தாமேயுளவாமிலக்கணமாகலின் அநுவாதமாக வைத்துணர்த்தற்பாலனவாகிய இவற்றைக் களைக இணங்குக வழிபடுகவென விதியாக வைத்தோதிய தெற்றுக்கென்பாரை நோக்கி அதனை அவற்றதொழிபாகக்கொண்டு சாதித்தற்கு மேற்கோடனுதலிற்று.

இவ்விடங்களென்றது மேற்கூறிய இரண்டனையும்
வழிபடுகவென்னும் எடுத்தலோசையான் அநுவதித் துணர்த்துவதே யமையு மென்பாரைநோக்கி விதித்தலை வலியுறுத்தவாறு. இனம்பற்றிக் களைதல் இணங்குதல்கட்கும் இஃதொக்கும்.

**நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவை யாகாவாறு அப்புருடனுமாகலான்.**

**ஏ**—எய்தியதனை விதித்தல் பயனுடைத்தன்றுபோலுமென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

நரம்புமுதலிய தாதுக்களின்கண் வேற்றுமையின்றி அதுவது தானாய் வருகின்ற உயிர் நாடியோ என்போ நரம்புசீக்கோழையோ என்று இங்ஙனம் பைமறியாய்ப் பார்ப்பார்க்கு அந்நரம்பு நாடி முதலியவையாகாது அவற்றின் வேறுமாயினாற்போல உயிர்க்குயிராகிய அம்முதல்வனும் உயிர்ப்பொருள் உயிரில்பொருளெல்லாவற்றினுங் கலப்பான் அதுவது தானாகியும் பொருண்மையான் அல்லனாகியும் நிற்பனாகலான் அதுவது தானாய்க் காணுங் காட்சிபற்றி யெய்திய வழிபாடு அல்லனாய் நிற்றலைக் காணுங்காலெய்தாதாகலின் அவ்வழியுமெய்துவிக்க வேண்டுதலான் இனி இவ்விடங்களின் வழிபடுகவென விதித்தோதியது.

அவையாகாவாறப்புருடனுமெனவே அவ்விடத்தெய்துவித்தல் ஒருதலையான் வேண்டுமென்பது தாற்பரியமாயிற்று. மேற்கோளின் இவ்விடங்களையென்னாது இவ்விடங்களினென வேற்றுமைப்படுத்தோதியதூஉம் இஃதுணர்த்துகோடற்பொருட்டு. இதனானே, *எய்தாத தெய்துவிப்பதூஉம், எய்தியதிகந்துபடாமற் காப்பதூஉம், எய்தியதனை யொருமருங்கு மறுப்பதூஉம் என்னும் விதிமூன்றனுள், இஃதெய்தியதிகந்துபடாமற் காத்ததென்பது போந்தவாறுணர்க.

அதுஇது என்ற ததுவல்லான் கண்டார்க்(கு)
அதுவிது வென்றதையும் அல்லான்—பொதுவதனில்
அத்துவித மாதல் அகண்டமுந் தைவமே
அத்துவிதி அன்பில் தொழு.

உ—முதல்வனுக்கு அவ்வியல்பு எல்லாப்பொருட்கண்ணு முண்மையின் அவற்றுள் இவ்விடயங்களின்மாத்திரையே வழிபாடு விதித்ததென்னை யென்பாரைநோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

கண்டார்க்கு - முதல்வன் உயிர்ப்பொருள் உயிரில்பொருளெல்லாவற்றினும் நிற்குநிலைமை யறியப்பெற்றோர்க்கு,—அது இது என்றது (அல்லான்) - கண் அருக்கன்போல் அதுவும் இதுவுமெனப் பக்கிசைத்தோதப்பட்ட பேத நிலைமையனுமல்லனாய்,—அது (என்றது) அல்லான் - உடலுயிர்போல் அதுவேயென்றோதப்பட்ட அபேத நிலைமையனு மல்லனாய்,—அது இது என்றதையும் அல்லான் - குணகுணிபோல் அதுவாகிய இதுவென்று பக்கிசையாமலோதப்பட்ட பேதாபேத நிலைமையனு மல்லனாய்,—பொதுவதனில் அத்துவிதம் ஆதல் அகண்டமுந் தைவமே - அறிவொளிபோல் அம்மூன்றற்கும் பொதுமையான் அத்துவிதநிலைமையனாதலான் எல்லாப்பொருளும் அவன்வடிவேயாமாயினும்,—அத்துவிதி அன்பின்தொழு - அவற்றுள்ளும் அன்பு விளையுமிடத்தின் வழிபடுவாயாக அவ்வத்துவித சித்தாந்தத்தைப் பெற்றுடையோய்.

அது விதுவென்றது முன்னையது உம்மைத்தொகை; பின்னையது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அல்லானென்பதனை மேலுங் கூட்டி, என்றதென்பதனை அதுவென்றதனோடுங் கூட்டியுரைக்க. அல்லானென்பது முற்றெச்சக் குறிப்பு.

*“ திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி ” யினன்றி *“எங்குமுருக்காணவொண்ணாத பான் முலைப்பால் விம்மியொழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவ”தாகி அடிப்பட்டுவருமன்பு விளையாமையின் ஆண்டுச்செய்யும் வழிபாடே அத்துவித ஞானத்தை நிலைபெறுத்தற் பயத்ததென்பார் அத்துவிதமாதலகண்டமுந் தைவமேயென அநுவதித்து அத்துவிதியன்பிற்றொழுவென்றார். அத்துவிதியென்னும் அண்மைவிளி பயனுணர நின்ற குறிப்புப்பெயர். இதனானே விதிக்குப் பயன்கூறியதூஉமாயிற்று. இனி அது இதுவென்பன அருவுருவாகிய திருமேனியெனக்கொண்டு அதற்கியையவுரைப்பாருமுளர். அவர், அன்பினென்றதனை ஏதுப்பொருட்கண் வரும் ஐந்தனுருபேற்ற இயற்பெயராக வைத்துரைப்ப.

வினையால் அசத்து விளைதலால் ஞானம்
வினைதீரின் அன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழுவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பிற் றொழு.

உ—அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று கண்டொருவவே ஞானசொரூபம் உளதாய் அத்துவிதத்தையுணர்த்துமாகலான் அதன் பொருட்டு வழிபாடு வேறு விதித்தல் எற்றுக்கென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

---

* எய்தாததெய்துவிப்பது, அபூர்வவிதி. எய்தியதிகந்துபடாமற் காப்பது, நியமவிதி. எய்தியதனையொருமருங்கு மறுப்பது, பரிசங்கியா விதி. இது திராவிடமாபாடியத்திற் கண்டது.

* சிவஞானசித்தியார், பன்னிரண்டாஞ் சூத்திரம். ௪.

வினையால் அசத்து விளைதலான் வினைதீரின் அன்றி ஞானம் விளையா - உடம்பின் கண்ணதாகிய பிராரத்தவாசனை உயிர்க்குத் தாக்குவதாயுள்ள துணையும் அதனான் வரும் விருப்புவெறுப்புக்களும் அவைபற்றிக் காட்சிப்படும் மண்முதன் மாயைகளும் அவைபற்றி நிகழும் விபரீத வுணர்வுமாகிய அசத்துக்கள் ஒருவியவழியும் வந்து கூடி மேம்படுவனவாகலான் அவ்வளவிற்கெல்லாம் மூலமாகிய பிராரத்த வாசனை பற்றறக்கழிந்தாலன்றி அவ்வசத்தைக் கீழ்ப்படுத்து மெய்யுணர்வு மேம்படுதல் கூடாதாகலின்,—வினை தீர ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்-அவ்வாசனை பற்றறக் கழிதற்பொருட்டு அம்மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடவே அவ்வினைநீங்கி மெய் யுணர்வு மேம்பட்டு நிகழும்,—ஆனத்தால் அன்பின்தொழு - ஆகலான் அன்பினால் அவரை வழிபடுவாயாக.

அசத்தையொருவியவழி உளதாகிய ஞானசொரூபம் நிலைபெறுதல் அவ்வசத்தினது விளைவிற்கு வேராகிய வினைத்தீர்வின் கண்ணதாகலான், அவ்வினை வேரறுத்து மெய்யுணர்வை நிலைபெறுத்துதற் பொருட்டு அதனை அங்ஙன நிலைபெறுத்தினார் மாட்டுச் செய்யும் வழிபாடு ஒருதலையான் வேண்டப்படுமென்பதாம். அற்றேல், அதன் பொருட்டு ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்கவென்றவதுவே அதற்கமையுமெனின்,—அஃதொக்கும். அவ்வுச்சரிப்பும் இவ்வழிபாட்டை யின்றியமையாதென்க. அற்றாகலினன்றே, ஆண்டஞ்செழுத்தாலெனவும், மண்முதல் நாளமெனவும் அகத்து வழிபாட்டை உடன் கூறியதூஉமென்பது. ஆனதனாலென்பது ஆனத்தாலென மரீஇயிற்று.

> தன்னை அறிவித்துத் தான்றனைச் செய்தானைப்
> பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
> தானேதா னச்செய்தும் தைவமென்றுந் தைவமே
> மானே தொழுகை வலி.

உ—அங்ஙனம் பயன்பற்றி விதிக்கப்படும் வழிபாடு வேள்வி முதலியனபோலப் பயன் வேண்டாமையானுதல் பின்னர்ச் செய்து பெறுது மென்றுதல் ஒரோவழி யொழியவும் படுங்கொல்லோவென்பாரை நோக்கி அது செய்யாவழிப்படுங் குற்றமும் செய்தல் கடமையாமாறும் உணர்த்தி விதித்தலை வலியுறுத்துதனுதலிற்று.



தன்னை அறிவித்துத் தான் தான் ஆச்செய்தானைப் பின்னை மறத்தல் பிழை அலது - தன்னுண்மையை அறியமாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பலவாற்றானும் அதனைத் தெரித்துணர்த்தி எத்தனையுமெளிய அவ்வுயிரை எத்தனையுமரிய தானும்வண்ணஞ் செய்தளித்த பெரியதோருதவியை அதன் பின்னர் மறக்குமாயின் அஃது இதற்குமுன் அறியாமையான் மறந்த குற்றம்போலத் தீர்திறனுடையதோர் குற்றமன்றாகலானும்,—முன்னவனே தானே தானச் செய்தும் தைவம் என்றும் தைவமே மானே தொழுகை வலி - முதல்வன் அங்ஙனந் தான்றானேயாகச் செய்தாலும் இதுகாறுந் தனக்குச் சுதந்திரமின்றி முதல்வனது உபகாரத்தை யின்றியமையாதாய் அடிமையாகிய உயிர் எக்காலத்தும் அவ்வாறடிமையே யாமாகலானும் தான்றானச் செய்தளித்த அப்பெரியோனை வழிபடுதலே அவ்வுயிர்க்கு வலியாவது.

தமதுமுதற்றானே குருவாகலின் தான்றானச் செய்தானை யென்றும், முன்னை மறந்த குற்றம் அறியாது நிகழ்ந்ததாகலிற் கழுவப்படும் இஃததுபோற் கழுவப்படுவதன்றென்பார் பின்னை மறத்தல் பிழையலதென்றுங்கூறினார்.பின்னை மறத்தலென்றதனால்முன்னை மறத்தல் பெறப்பட்டது. *"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை - செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்னுங் கருத்துநோக்கிக் கூறியதூஉமாம். அலதுமெனப் பாடமோதி இது பிழையாதலன்றியுமென்றுரைப்பாருமுளர்.

தான்றானச்செய்தல் எதனை எதனைப் பற்றினும் அதுவதுவாமுயிர் தன்னை யறிந்தவழி எண்குணங்களானிறைந்து தன் வண்ணமாகச்செய்தல். அங்ஙனஞ்செய்தவழியும் †"உயிர்தானுஞ் சிவாநுபவமொன்றினுக்கே யுரித்து" என்பார் தைவமென்றுந் தைவமேஎன்றார். தைவமென்னுஞ் சொல்லியல்பு மேலே யுரைத்தாம். வலிதருவதனை வலியென்றுபசரித்தார். இவ்வுதாரணங்கள் மூன்றானும், வழிபாட்டிற்கும் இடத்து நிகழ்பொருண்மாத்திரையேயன்றி இடவிசேடமும் பெறல்வேண்டுமென அதனை வலியுறுத்துமுகத்தானே,

---

* திருக்குறள், செய்ந்நன்றியறிதல். க0

† சிவஞானசித்தியார், பதினொராஞ்சூத்திரம். க0, செம்பிரத.

முறையே சிவலிங்கத்தையுஞ் சிவபத்தர் வேடத்தையுஞ் சிவதேசிகர்களையும் அறிந்து வழிபடுமாறு கூறப்பட்டது.

சிவமென்னும் அந்ததர சிந்தைநேர் நோக்கப்
பவமென்றுங் கண்வா சகத்தில்—சிவமுண்டாம்
ஒன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவால்
இன்றிந்நூன் மும்மை மலர்க்கு.

**உரை**—இங்ஙனஞ் சிவாகமத்துள் ஞானபாதப் பொருளெல்லாவற்றையும் பொது உண்மையென் றிருவகைப்படுத்துப் பிரமாணவியல் இலக்கணவியல் சாதனவியல் பயனியலென நான்கியலாக வைத்துப் போதிப்பதாகிய இச்சிவஞான போதநூலைக் கோடற்குரிய அதிகாரிகளாவார் இவரென்பதுணர்த்துதற் கெழுந்தது.

சிவம் என்னும் அந்த தர - தான்றானுச் செய்தவாற்றாற் சீவனென்னு மியல்பினீங்கிச் சிவமென்றோதப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தையுடைய மாணவகனே!—ஒன்றும் இரண்டும் மலர்த்தார்க்கு ஒன்றுமிரண்டுமாய மலங்களையுடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும்,—சிந்தை நேர் நோக்கக் கண் வாசகத்தின் பவம் இன்று ஆம் சிவம் உண்டாம் - முறையே அறிவின்கணின்று அருட்பார்வையா னோக்குதலானும் தேவகுருவாய் முன்னின்று செய்யுந் திருநோக்கம் பரிசம் வாக்கெனப்படுந் தீக்கையானும் பிறவிக்கேதுவாய பசுத்துவநீங்கிச் சிவத்துவம் விளங்குமாகலான்,—மும்மை மலர்க்கு இங்கு ஒண்குருவால் இன்று இந்நூல் - அவரின் வேறாகிய மும்மலமுடையவர்க்கே உரித்து இவ்வுலகத்தனுபவமுடைய தேசிகராற் போதிக்கப்படும் இச்சிவஞானபோத நூல்.

அந்தம் வேதாந்தம், அந்ததரஞ் சித்தாந்தமாகலின், அதனைப் பெற்றாரது பெருமை கூறுவார் சிவமென்னு மந்ததரவென்றார். என்னுமென்புழிப் படுசொற்றொக்கு நின்றது. சிந்தை அறிவு. நேர் நோக்குதல் முன்னை மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையா னோக்குதல். நோக்க நோக்குதலானென்க. கண்வாசகங்களைக் கூறவே இனம் பற்றிப் பரிசமும் உடன் கொள்ளப்படும். இந்நூல் அநுபவமுடைய தேசிகனாலன்றி விளங்காதென்பார் ஒண்குருவாலென்றார். போதிக்கப்படுமென்பது அவாய்நிலையான் வந்தது. இன்றிந்நூ



லென்பது இந்நூலென்னும் பொருட்டு. இக்காலத்துரைக்கப்படு நூலெனினுமமையும். அது "தானுரைத்தானின்று" என வருகின்ற வெண்பாவாற் கூறியவாற்றானுமறிக.

மும்மையென்றது ஈண்டெண்ணின் மேனின்றது, "தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப்போல.

**உண்மையதிகார முடிந்தது.**

---

***எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழவியல்பாய்
நந்தி யுரைத்தருளும் ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

இந்நூலாசிரியன் திருவருட் சிறப்புணர்த்துதற் கெழுந்தது.

எந்தை சனற் குமரன் - எந்தையாகிய சனற்குமார முனிவன் முதலிய முனிவர்கணங்கள்,—ஏத்தித்தொழ - துதித்துவணங்க,—நந்தி - ஸ்ரீகண்டதேவர்பாற் கேட்டருளிய நந்திப்பெருமான்,—இயல்பாய் - தான் கேட்டமுறையே,—உரைத்தருளும் - உபதேசித்தருளிய, —ஞானநூல் - சிவஞானபோதமாகிய வடநூலை, —சிந்தை செய்து - பரஞ்சோதி முனிவன்பாற் கேட்டவாறே சிந்தித்து,—தாரணியோர் தாம் உணர - தமிழ்நாட்டார் அறிந்துய்தற்பொருட்டு,—ஏது திருட்டாந்தத்தால் - மேற்கோளோடு கூடிய ஏது திருட்டாந்தங்களுடன்,—இன்று - இக்காலத்தே,—மெய்கண்டான்தான் உரைத்தான் - மொழிபெயர்த்துக்கூறி வார்த்திகப்பொழிப்புரை செய்தருளினன் மெய்கண்டதேவன்.

---

* இது பிற்காலத் தான்றோராற் செய்யப்

உ

சிவமயம்

# சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து*

## முதற்சூத்திரம்

௧.—சகம் பிறப்பிருப்பிறப்பாகிய முத்தொழிலை யுடையது.

௨.—அது அரனாலே உடையது.

௩.—மற்றிருவரும் முத்தொழிற் படுவர்கள்.

## இரண்டாஞ் சூத்திரம்

௧.—அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.

௨.—உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.

௩.—உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.

௪.—அரன் சருவ வியாபகன்.

## மூன்றாஞ் சூத்திரம்

௧.—இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.

௨.—எனது உடல் என்று பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறாய் உயிருண்டு.

௩.—ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கு வேறாய் உயிர் உண்டு.

௪.—கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே, அக்கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு.

௫.—நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவுஞ் சரீரத்துக்குப் புசிப்புத் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.

௬.—மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு.

---

*இதன் ஆசிரியர் பொல்லாப் பிள்ளையார் என்று பழைய வரலாறும் திருவாவடுதுறை சுவாமிநாததேசிகர் என்று புதிய ஆராய்ச்சியும் கூறுகின்றன.



௭.—எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

## நான்காஞ் சூத்திரம்

௧.—அந்தக்கரணங்களுக்கு உயிர் உட் கூடினாலன்றித் தொழில் இல்லாதபடியினாலே, அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

௨.—மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை.

௩.—உயிர் மூன்றவத்தைப்படும்.

## ஐந்தாஞ் சூத்திரம்

௧.—உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும்.

௨.—அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.

## ஆறாஞ் சூத்திரம்

௧.—உயிரறிவினாலே அறியப்பட்டவெல்லாம் அழியும்.

௨.—அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

## ஏழாஞ் சூத்திரம்

௧.—அரன் பாசத்தை அநுபவியான்.

௨.—பாசம் அரனை அநுபவியாது.

௩.—உயிர் அவ்விரண்டனையும், அநுபவிக்கும்.

## எட்டாஞ் சூத்திரம்

௧.—உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும்.

௨.—உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.

௩.—உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது.

௪.—உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

## ஒன்பதாஞ் சூத்திரம்

௧.—உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக் காணும்.

௨.—உயிர் பாசத்திலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன்.

௩.—பஞ்சாக்ஷரசெபம் பண்ணினால், வாசனாமலம் போம்.

### பத்தாஞ் சூத்திரம்

௧.—அரனுடன் ஒன்றாகி நில்.

௨.—உன்றொழிலெல்லாம் அரன் பணி என்றே கொள்.

### பதினோராஞ் சூத்திரம்

௧.—ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுபவிப்பன்.

௨.—அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கமாய்ப் போவன்.

### பன்னிரண்டாஞ் சூத்திரம்

௧.—மும்மலங்களையும் களைக.

௨.—சிவஞானிகளுடனே கூடுக.

௩.—சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெனவே தேறி வழிபடுக.

௪.—வழிபடாமையை ஒழிக.

---

## சிவஞானபோதத்தைப் பற்றிப் பிற்காலத்தவரால் செய்யப்பட்ட செய்யுள்கள்

### நூற்சிறப்பு

வேதம்பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓதுந்தமிழ் அதனின் உள்ளுறுநெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.

### நூற்கருத்து

முதற்பதி அரனே ஐந்து முன்னத்து விதமி ரண்டே
இதற்பினே யனுமா னத்தால் எண்ணிலா உயிர்கள் மூன்றே
அதற்பினே யவத்தை நான்கே யகமறுத் திடலே யைந்தே
செகற்பதி பிரித்த லாறே தெரிவித்த லுயிரை யேழே.

மறைப்பினை நீக்கி ஞான வாரியை நினைத்த லெட்டே
சிறப்புடை யுபாயந் தம்மாற் றெளிவித்த லுயிரை யொன்பான்
அறுத்திடன் மலங்கள் பத்தே யழுந்தலே சிவத்தி லொன்றே
திறப்பணி கொளலி ரண்டே சிவஞான போதஞ் சித்தி.

### மெய்கண்ட தேவர் துதி

சிறிய வாடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்
கறிவு நூல்களின் முடிபெலா மகத்தடக் கியதோர்
நெறியி னீடிய நிகழ்சிவ ஞானபோ தத்தைக்
குறிய தீந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம்.

மூன்று மலங்கெடுத்து மூலமா மப்பொருளுந்
தோன்ற வருளுந்தன் தொண்டர்க்கிங்—கான்றமைந்தோர்
கைகண்ட தன்றே கடன்ஞாலத் தெப்பொருட்கு
மெய்கண்ட தேவன்விரைத் தாள்.



உ

சிவமயம்

## சிவஞானசித்தியார் வரலாறு

ஆறாறு தத்துவமும், ஆணவமும், வல்வினையும்
நீறாக முத்திநிலை நிற்போற்குப்—பேறாகப்
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதி போதும்.—(**சிவபோகசாரம்**)

**சிவஞானசித்தியார்** என்பது சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் மிக விரிவானது; பரபக்கம் சுபக்கம் என்ற இரு பெரும் பகுதிகளையுடையது. பரபக்கத்தில் ஏனைய மதவாதிகளின் கூற்றுக்களும் அவற்றின் மறுப்புக்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன; சுபக்கத்தில் சைவசித்தாந்த சமயத்தின் கோட்பாடுகள் விவரிக்கப் பட்டுள்ளன. இவ்விருபகுதிகளும் அடங்கிய இந்நூலை இயற்றியவர் அருணந்தி சிவாசாரியர். இவர் ஆதி சைவ மரபில் கி. பி. 13-ம் நூற்றாண்டில் திருத்துறையூரிலே தோன்றியவர். மெய்கண்டாரது முதல் மாணாக்கர். இவர் சகலாகம பண்டிதர் என்ற பெயரோடு மெய்கண்டார்க்குக் குலகுருவா யிருந்ததும் பின்னர் மெய்கண்டாரது

சீடரானதும் சிவஞானபோத வரலாற்றில் (மேலே ௧௧-வது பக்கம் பார்க்க) கூறப்பட்டன. மெய்கண்டாருடைய கட்டளையைச் சிரமேற் றாங்கி "சிவஞான போதம்" என்ற தமது ஆசிரியர் நூலை முதல் நூலாகக்கொண்டு "சிவஞான சித்தியார்" என்ற இவ்வழி நூலை இயற்றினார். இவரது மாணாக்கர் மறைஞானசம்பந்தர்.

சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கு உரை கண்டவர் திருவொற்றியூர் ஞானப் பிரகாசர், அவர் மாணவர் தத்துவப் பிரகாசர், வேலப்ப பண்டாரம் ஆகிய மூவர். சுபக்கத்துக்கு உரை கண்டவர் மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகியர், நிரம்ப அழகிய தேசிகர், ஞானப்பிரகாசர், சிவஞான முனிவர், சுப்பிரமணிய தேசிகர் என்ற அறுவர். இவர்களது சரித்திரங்களை விரித்துக் கூறின் இவ்வரலாறு மிகப் பெருகுமென அஞ்சி சுருங்கக் கூறுவாம்:—மறைஞான தேசிகர் திருஞான சம்பந்தரின் அடியருள் ஒருவராகிய ஆநந்தவள்ளலின் பரம்பரையில் வந்தவர். வேறு நூல்கள், உரைகள், பரமததிமிரபானு என்பவற்றின் ஆசிரியர். சிவாக்கிரயோகியர் சூரியனார் கோயில் ஆதீனத் தாபகர். சிவஞானபோதத்துக்கு 12,000 சுலோகமுள்ள ஒரு வடமொழி உரை கண்டவர்; பல நூல்களியற்றியவர். நிரம்ப அழகியார், சேதுப்புராணம் பாடியவர், திருவருட்பயனுக்கும் உரை கண்டவர். ஞானப்பிரகாசர் ஈழநாட்டிலிருந்து வந்து திருவண்ணாமலை ஆதீனத்திலிருந்து பௌஷ்கரவிருத்தி முதலிய பல வடமொழி நூல்களியற்றியவர். இவர் வேறு; திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் வேறு. சிவஞான சுவாமிகள் வரலாற்றை மேலே ௧௨-வது பக்கத்திற் காண்க. சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறை யாதீன கர்த்தராக கி. பி. 19-வது நூற்றாண்டிலே விளங்கியவர். இவ்வறுவர் உரைகளையும் நன்றாய்க் கற்று திருவாளர் - கொழும்பு - மு. திருவிளங்கம் என்ற பேரறிஞர் ஒரு தெளிவான விளக்கவுரையை கி. பி. இருபதாம் நூற்றாண்டி லியற்றியுள்ளார்.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## திருத்துறையூர் - அருணந்தி தேவர்

அருளிச்செய்த

# சிவஞானசித்தியார் பரபக்கம்

# மூலமும்

# தத்துவப்பிரகாசர் உரையும்

### காப்பு

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாய்
ஐங் கரத்தன் ஆறு, தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடை
யான் தரும்ஒரு வாரணத்தின் தாள்கள், உருகோட்டன்
பொடும் வணங்கி ஓவாதே இரவுபகல் உணர்வோர் சிந்தைத்,
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன் றோஎன்னச்
செய்யும் தேவே. ௧

(உரை) கங்கையாறுங் கோணுதலைத் தரும் அழகிய பிறையுங் கொன்றை மாலையுமுடைத்தாய்த் தாழ்ந்த சடையினையுடைய சிவபெருமான் பிள்ளையாகத்தந்த தேவன், ஒரு கொம்பையும் இரண்டு செவியையும் மூன்று மதத்தையும் நான்றவாயையும் ஐந்து கரத்தையுமுடையோனாகிய ஒப்பற்ற யானையினது தாள்கள் உள்ள முருகுதலைச் செய்வதாகிய அன்போடு கூடி வந்தித்து ஒழியாது இரவும் பகலு நினைப்போரது நெஞ்சிற்றிருக்கை ஈண்டணுகாவண்ணம் தூக்கும். பிரம விஷ்ணுக்கள் பதங்களும் ஒன்றல்லவென்ன மிக்க வீட்டின்பத்தையும் உண்டாக்கும். ௧

## மங்கல வாழ்த்து

### சிவபெருமான்

ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி அருள்ஞான
மூர்த்தியாய் அகிலம் ஈன்ற, மாதினையும் ஒருபாகத் தடக்கி
வானோர் மகுடகூ ளாமணியாய் வையம் போற்றப், பாதிமதி
யணிபவளச் சடைகள் தாழப் படரொளிஅம் பலத்தாடும்
பரனார் பாதத், தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம். உ

**(உரை)** முதனடு விறுதியின்றி ஒருவராலு மறியப்படாத பர சொரூபப் பிரகாசத்தையுடைய அருளாகிய ஞானமே திருமேனியாகக்கொண்டு தனது காருண்யத்தினாலே சகளீகரித்துப் பிரபஞ்சத்தை யுண்டாக்கிய அந்தப் பரமேசுவரியையுந் தன்னிடப்பாக முழுதினும் அடக்கிப் பிரமன் மால் முதலாகிய தேவர்களது மகுடரத்திநம்போலு மிக்க சத்தி சிவமாகிய சகள நிஷ்கள சொரூபமாய் உலகத்துள்ளார் துதிப்ப ஒற்றைக்கலையை அலங்காரமாக வணிந்த பவளம்போன்ற சடைகளைத் தாழவிட்டு விரிந்த ஒளியையுடைய திருவம்பலத்தின்கண்ணே நிருத்தஞ் செய்தருளுகின்ற மேலான பரமனது சீபாதங்களாகிய தாதுக்கண் மிக்க தாமரைமலர்களைத் தலையின்மீது வைத்துத் தளர்ச்சியில்லாத மிக்கவன்பு மிகவும் உண்டாம்படி நில்லா நின்றேம். க

### சத்தி

ஈசனருள் இச்சைஅறி வியற்றல் இன்பம் இலயமொடு
போகமதி கார மாகித், தேசருவம் அருவுருவம் உருவ
மாகித் தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப், பேசரிய
உயிரையெலாம் பெற்று நோக்கிப் பெரும்போகம் அவையளித்துப்
பிறப்பினையும் ஒழித்திட்(டு), ஆசகலும் அடியருளத்
தப்பனுட னிருக்கும் அன்னையருட் பாதமலர்
சென்னி வைப்பாம். ங

**(உரை)** ஈசன் அருள்........அதிகாரமாகி - கருத்தாவை விட்டு நீங்காத சத்தியானது அவனது கருணையினால் பராசத்தியும் இச்சாசத்தியும் ஞாநசத்தியும் கிரியாசத்தியும் திரோதான சத்தியும் இவை



யன்றி இலயபோக அதிகார அவத்தைகளுமாய்,—தேசருவம்........செல்வமாகி - அந்தப் பிரகாசமாகிய இறைவனுக்கு அரூபம் ரூபாரூபம் ரூபமெனப்பட்ட மூன்றுமுறைமைக்கும் அம்முறைமைகளாகிய வடிவுந் தானாய் இறைவன் அங்ஙனம் கொண்டருளுந் திருமேனிக்கு அந்தந்தச் சத்திகளும் தானாய்ப் பிரபஞ்சங்களும் பதார்த்தங்களுந் தானாய்,—பேசரிய........நோக்கி - அவன் எடுத்துக்கொண்ட திருமேனிக்கேற்ற சத்தியாய் நின்று எண்ணுதற்கரிதாகிய எல்லா ஆன்மாக்களையும் படைத்து அளித்து,—பெரும் போகம்........ஒழித்திட்டு - ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்கட்கீடாகச் சுவர்க்காதி பதங்களையுங் கொடுத்து நரகங்களையுங் கெடுத்து அவ்விறைவனோடுங் கூடிநிற்க முத்தியையுங் கொடுத்து,—ஆசு அகலும்........அன்னை - அஞ்ஞான நீங்கின அடியார் இருதயத்திற் சிவபெருமானோடும் கூடியிருக்கும் உலகமாதாவினுடைய,—அருட் பாதமலர் சென்னி வைப்பாம் - கிருபையாகிய திருவடித் தாமரைகளை எந்தலைமேல் வைத்துக் கொள்ளா நின்றேம். உ

### விநாயகக்கடவுள்

இயம்புநூல் இருந்தமிழின் செய்யு ளாற்றால் இடை
யூறு தீர்ந்தினிது முடிய வேண்டித், தயங்குபேர் ஒளியாகி
எங்கு நின்ற தலைவனார் மலைமாது தன்னோ டாடிப், பயந்த
ஐங் கரநாற்றோள் முக்கண்இரு பாதப் பரியதொரு நீள்
கோட்டுப் பெரிய பண்டிக், கயந்தன்அடிக் கமலங்கள் நயந்து
போற்றிக் கருத்திலுற விருத்திமிகக் காதல் செய்வாம். ச

**(உரை)** இயம்புநூல் - இப்பொழுது சொல்லுநூல்,—இருந்தமிழின்...வேண்டி - பெரியதமிழினாற்செய்யுமிச் செய்யுள் பஞ்சாதிகாரங்கள் சொல்லும் வழியால் வருங்குற்றமொழிந்து இனிதுமுடிதலைவிரும்பி,—தயங்குபேரொளியாகி - விளங்கும் பெரிய ஒளியேயாகி,—எங்கு நின்ற தலைவனார் - எவ்விடத்தும் பூரணமாய் நின்ற இறைவர்,—மலைமாது தன்னோடு ஆடிப்பயந்த - அசுரரைக்கொல்லு நிமித்தமாக இமையமாதோடுங்கூடி உண்டாக்கப்பட்ட,—ஐங்கரம்... தன் - ஐந்துகையினையும் நான்குதோளினையும் மூன்றுகண்ணினையும் இரண்டு பாதத்தினையும் பரியதாகி நீண்டதொரு கொம்பினையும் பெரியவயிற்றினையுமுடைய யானைமுகத்து விநாயகனது,—அடிக்க

மலங்கள்...செய்வாம் - சீபாதகமலங்களை விரும்பித் துதித்துச் சித்தத்திலுமுறும்படி வைத்து மிக்கவிருப்பத்தைச் செய்யாநின்றேம். ௩

## சுப்பிரமணியக்கடவுள்

அருமறைஆ கமம்அங்கம் அருங்கலைநூல் தெரிந்த அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருளை, திருமறைமா முனிவர்முனி தேவர்கள்தந் தேவன் சிவனருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம், பொரும்அறையார் கழல்வீரர் வீரன் கையிற் பூநீர்கொண் டோவாது போற்றும் அடியார்கள், கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந்தன் கழலிணைக ளெஞ்சிரத்திற் கருத்தில் வைப்பாம். ௫

(உரை) அருமறை...குருளை - தெரிதற்கரியவேதங்களும் ஆகமங்களும் ஆறங்கங்களும் அரிதாகிய கலைஞானங்களுமாகிய நூல்களை ஆராய்ந்த அகத்தியமாவிருடிக்கு வேதவியாக்கியாநத்தை அருளிச் செய்த ஞானசாரியனாகிய இளையபிள்ளை,—திருமறைமா...தெய்வம் - அழகிய வேதத்தைக்கற்றுவல்ல மிக்கவிருடிகட்குத் தலைவனாகிய விருடி,—தேவர்கட்குச்சுவாமி,—சிவனுக்குக் கிருபையாலுண்டாகிய புத்திரன் தவத்தின்மிக்கோர்க்கு வழிபடுந்தெய்வம்,—பொரும் அறையார்...கந்தன் - ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய பொருகின்ற வீரர்க்கு வீரன், ஒழியாது கையின் மலருமஞ்சனமுங்கொண்டு துதிக்கும் அடியார்கள் கருப்பத்தில் அழுந்தாதவகை அருள்செய்து மோக்ஷத்தைக் கொடுக்குங்கந்தசுவாமி,—கழலிணைகள்...வைப்பாம் - அவனது சீபாதங்களிரண்டையும் எந்தலைமீதும் இதயத்திலும் வைத்துக்கொள்ளாநின்றேம். ௪

## மெய்கண்டதேவநாயனர்

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம் பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக், கண்டஇரு தயகமல முகைகளெல்லாங் கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன், விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன், புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும் பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம். ௬



(உரை) பழையதாகிய வேதவண்டுகள் ஒலிப்பப் பரஞானமாகிய செவ்வியதேன் சிநேகத்தோடும் புறப்படச் சிவமாகிய மணம்விரிந்து மணக்கச் சகலரிற் சத்திநிபாதம் பதிந்து தரிசித்தோரது இதயகமலங்கள் விட்டு விரியப் பூமியிடத்தெழுந்தருளிய விரிந்தமலர்களையுடைய பொழில்கள் பக்கங்களிலே சூழப்படாநின்ற திருவெண்ணெய் நல்லூரைத் திருப்பதியாகப்பொருந்தின சைவசித்தாந்தத்துக்கு ஆதியாகிய மெய்கண்டதேவனென்னுந் திருநாமத்தையுடைய ஞானசூரியனது அழகிய சீபாதங்கள் தாமரைமலரும் ஒப்பழியும்படி எமது தலைமீதே எப்பொழுதும் வாழும் ஆதலால் அவற்றையே துதியாநின்றேம். ௫

---

## அவையடக்கம்

மாலயன்மா மறைஅறியா ஆதி மார்க்கம் வையகத்தாகமம்வேத மற்றுமுள்ள, நூலெலாம் உணர்ந்திறைவன் கழலே நோக்கு நோன்மைஅருந் தவர்முன்யான் நுவலுமாறு, வேலையுலா வுந்திரைகள் வீசி யேறி வேறெழு மொன்றாகி நின்ற போது, சாலவுமான் குளப்படியிற் றங்கி நின்ற சலமதுதா னேனென்னுந் தன்மைத் தாலோ. ௭

(உரை) மால்...மார்க்கம் - பிரமவிஷ்ணுக்களாலும் நான்கு வேதங்களாலும் அறிதற்கரிதாகிய பரமேசுவரனது வழியை,—வையகத்து...நுவலுமாறு - பிரபஞ்சத்தின்கண்ணே ஆகமத்தையும் வேதத்தையும் அவற்றின்வழியுண்டாகிய சாத்திரங்களையும் கற்றறிந்து பரமேசுரனது சீபாதங்களையே பற்றுக்கோடாகவுடைய நோய்முதலியவற்றைப் பொறுக்கும் அருந்தவத்தினர்முன்னே யாதும் அறியாதயான் சொல்லுநெறி,—வேலை...தன்மைத்தாலோ - உலாவுந் திரைகண் மிகுந்து வேற்றுமைப்பட்ட சமுத்திரமொன்றுபட நின்றவிடத்து மிகவும் ஆன்குளப்படியிற் றங்கிநிற்கும் சலத்தை அப்பிரளயசலத்துக்கொப்பென்னுமுறைமை யுடைத்து. ௬

நீடுபுகழ் உலகுதனில் மைந்தர் மாதர் நேயமொடு தாம் பயந்த புதல்வர் வாயில், கூடுமொழி மழலையொடு குழறி ஒன்றும் குறிப்பரிதா யிடினுமிகக் குலவிப் போற்றி, மாடு

நமக் கிதுவென்று கொண்டு வாழ்வர் அதுபோல மன்னு
தமிழ்ப் புலமை யோரென், பாடுகவிக் குற்றங்கள் பாரார்
இந்நூல் பாராட்டா நிற்பர்அருட் பரிசி னாலே. அ

நீடுபுகழ்...வாழ்வர் - நிலைபெற்ற புகழினையுடைய உலகின்கண் மாதராடவர் சிநேகத்தோடும் தாம் பெற்ற மக்களிடத்துண்டாகிய மொழி இளமையோடுதடுமாறி ஒன்றுந் தெரிதற் கரிதாயிருந்த தேனும் அதனை மிகவுங் கொண்டாடிப்போற்றி யாம் பெறும் பெருஞ் செல்வ மென்று மகிழ்ந்து வாழாநிற்பர்கள் —அதுபோல...பரிசினாலே - அத்தன்மைபோல நிலைபெற்ற தமிழ்ப்புலவராயினோர் என்னிடத்துண்டாகிய கவியினது குற்றம்பாரார், யான்சொன்ன இந்நூலைப் பாராட்டாநிற்பர் ஞானத்தின் முறைமைப்பாட்டினால். எ

## நூற்சிறப்பு

சுத்தவடி வியல்பாக வுடைய சோதி சொல்லியஆ கமங்
களெலாஞ் சூழப் போயும், ஒத்துமுடி யுங்கூட ஓரி டத்தே
ஒருபதிக்குப் பலநெறிக ளுளவா னாற்போற், பித்தர்குண
மதுபோல ஒருகா லுண்டாய்ப் பின்னொருகால் அறிவின்றிப்
பேதை யோராய்க், கத்திடுமான் மாக்களுரைக் கட்டிற் பட்
டோர் கனகவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வார். கூ

**(உரை)** சுத்த...சோதி - ஞானமே தனக்குச் சுதந்திரவடிவாக வுடைய இறைவன்,—சொல்லிய...ஓரிடத்தே - சமயபேதங்கடோறும் அவனருளிச்செய்த ஆகமங்களெல்லாம் பலபேதமாயினும் ஞான பாதம் எல்லா ஆகமங்களினும் தம்முளொத்துச் சென்று ஒரு பொருளையே நோக்கிமுடியும். அஃதென்போல வென்னில்,—ஒரு பதிக்குப்...போல் - ஓரூர்க்குண்டாகிய வழிகளெல்லாம் பலபேதப் பட்டதேனும் சேர அவ்வூரையே நோக்கிக்கிடந்தாற்போலும்,—பித்தர்...பட்டோர் - எல்லா ஆகமங்களிலும் ஞான பாதம் ஒக்குமென்று கண்டு முத்தியடைந்திருக்கும் ஆன்மாக்கள்போ லாகாமற் பித்தேறினோர் குணம்போல மருளுந்தெருளுமாய் முத்தியடையத்தக்க நெறியைக்காணாமல் அந்நெறியைக் கண்டாற்போலக் கூப்பிட்டுத்திரியும் அறிவிலோரென்னும் பரசமயிகளது பசுநூற்கட்டுக்குட்பட்டோர்,—



கனகவரை...வீழ்வார் - மகாமேரு வைக்குறித்து போக ஒருப்பட்டவன் அவ்வழி சென்றெய்தாமல் மற்றொருதிசையே போய்க்கடற்கே வீழ்ந்தாழுந்தன்மைபோலும். அ

## நூற்கதிகாரியும் நூல்வழியும் நூற்பெயரும்

போதமிகுத் தோர்தொகுத்த பேதைமைக்கே பொருந்
தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல, ஏதுநெறி யெனும
வர்கட் கறிய முன்னா னிறைவனரு ணந்திதனக் கியம்ப நந்தி,
கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக் குவலயத்தின் அவ்
வழியெங் குருநாதன் கொண்டு, தீதகல எமக்களித்த ஞான
நூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே. க0

**(உரை)** போத மிகுத்தோர் - சாத்திரஞானத்தான் மிக்கவர்கள்,—தொகுத்த பேதைமைக்கே பொருந்தினோர் - தொகுத்துச் சொல்லப்பட்ட அறியாமையைக் கூடினோர்,—இவர்க்கன்றி - இந்த விருவர்க்குமன்றி,—கதிப்பாற்செல்ல...இறைவன் இயம்ப-முத்தியின் வழிச்செல்ல யாது வழியென்று ஆராயுஞ் சத்திநிபாதத்தோர்க்கு அறியவேண்டி ஆதியிலே பரமேசுரன் தன்னளவிற் பத்திசெய்யும் நந்திபெருமானுக்கு அருளிச்செய்ய,—நந்தி கோதில் அருட்சனற்குமாரற்குக்கூற - ஸ்ரீநந்திபெருமானுந் தம்மளவிற் குற்றமற்ற பத்தி செய்யுஞ்சனற்குமார பகவானுக்கு அருளிச்செய்ய,—குவலயத்தின்... சிவஞானசித்தியென்றே - அம்முறைமையாலே கேட்டருளிப் பிரபஞ்சத்திலெழுந்தருளிய எம்முடைய சுவாமியாகிய மெய்கண்டதேவநாயனார் குற்றமற்றதமிழாகச்செய்து சிவஞானபோதச் சிறப்புத் திருநாமந்தரித்து எமதஞ்ஞானநீங்க அருளிச்செய்த அந்நூலை ஓதியுணர்ந்து சொல்லாநின்றேன் இந்நூலை சிவஞானசித்தியென்னும் பெயரினால். கூ

## நூற்கருத்து

இறைவனையும் இறைவனால் இயம்பு நூலும் ஈண்டள
வும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி, முறைமைகளும்
பெத்தமொடு முத்தி யெல்லா மூதுலகில் எமக்கியன்ற
முயற்சி யாலே, சிறையுலவும் புனல்நிலவித் தோன்றும்

பேய்த்தேர்ச் செய்கைபோ லுண்டாய பொய்கொள் மார்க்கத், துறைபலவுங் கடாவிடையாற் சொல்லிப் போக்கித் துகள் தீர இந்நூலிற் சொல்லகிற்பாம். கக

**(உரை)** இறைவனையும் இறைவனால் இயம்புநூலும் - பரமேசுரனையும் பரமேசுரனால் அருளிச்செய்யப்பட்ட வேதாகமபுராணப் பொருள்களையும்,—ஈண்டு அளவும் - இவ்விடத்துண்டாகிய அளவையாகிய பிரமாணத்தையும்,—பொருளியல்பும் - அவ்வளவைகளால் அறியப்படும்பொருள்களின் இயல்பையும்,—வேண்டுஞ்செய்தி முறைமைகளும் - அப்பொருளியல்பின் வழிநின்றோர் செய்யவேண்டும் ஆசாரங்களையும்,—பெத்தமொடு முத்தியெல்லாம் - பெத்தலக்ஷணத்துடனே முத்திலக்ஷணங்களெல்லாவற்றையும்,—மூதுலகில் எமக்கு இயன்ற முயற்சியாலே - பழையதாய் வரும் பிரபஞ்சத்தில் எமக்குக் கூடின செயலாலே,—சிறை உலவும்...சொல்லிப்போக்கி - தடைப்பட்டு நிற்கும் நீரை யொப்பத் தோன்றுகின்ற பேய்த்தேரினை மெய்யென்று நிருமிக்குமிடத்துப் பொய்யான தன்மையேபோல நூல்களாகவும் வழிகளாகவும்கேட்டார்க்குப் பொருந்தத்தக்கதாகவுண்டாய்ப் பொய்மைக் கைக்கொண்ட வழிகளாகிய உலகாயதன்முதற் பாஞ்சராத்திரியீருய சமயிகளுடைய பல துறைகளையுங் கடாவினானும் விடையினானுஞ் சொல்லிநீக்கி,—துகள்தீர இந்நூலிற் சொல்ல கிற்பாம் - குற்றந்தீர ஞானபாதத்தை அறிய இந்நூலிற் சொல்லக்கடவேம். க0

## உலகாயதன் மதம்

இந்திர புரோகிதன் இயம்பும்ஒரு நூலின்
தந்திர மெனுதறிவி னேடருளி லாமல்
சந்தனை புயத்துமண மாலைகள் தயங்க
உந்தியுல கத்திலுல காயத னுரைப்பான். கஉ

**(உரை)** சந்தனமணிந்த தோளிடத்து நறுமலர் மாலைகள் விளங்கும்படி கர்ப்பாசயநீங்காத உலகாயதன் இந்திரபுரோகிதனுகிய பிருகஸ்பதி பகவான் ஆன்மாக்கள் போகங்காரணமாக அருளியநூலை இப்பொழுது இடையூறென்று கொள்ளுதற்கு ஞானமுங் கிருபையுமில்லாமல் அந்த நூலையே உலகத்து மெய்யென்று சொல்லாநிற்பன். இயம்புநூல் உலகாயதசித்தாந்தம். இந்திரன் தவத்தினைப்புரியப் பிருகஸ்பதி அவனை மயக்கி விடயத்தில் வீழ்வித்த சாத்திரமென்க. அஃதென்போலெனின் அருச்சுனன்தவத்தினைப்புரிய வாசுதேவன்தேரிலிருந்து கீதையென்னுஞ் சாத்திரத்தினன்மயக்கிக் கொல்லுவித்ததற்கொக்குமெனக் கொள்க. உலகாயதன் சார்வாகனென்றும் சொல்லப்படுவன். க

ஈண்டளவை காட்சிமன மாதிஇரு மூன்றாய்
வேண்டும்அனு மானமுத லானபல வேண்டா
பூண்டபொருள் பூதமவை புகழ்கடின சீதந்
தீண்டரிய வெம்மைசல னத்தினொடு சேர்வே. க௩

**(உரை)** இவ்விடத்து அளவையென்று கொள்ளப்படுவது காட்சியே. அக்காட்சியினை விகற்பித்து ஐயக்காட்சிமுதல் ஆறுவகைக் காட்சியாய்க் கோடல்வேண்டும். இக்காட்சியில் விகற்பமொழிந்து அனுமானம் உரைமுதலிய பலவேண்டுவதில்லை. அக்காட்சியானும் அதன் விகற்பத்தானுங் கண்டு கைக்கொண்ட பொருள் பூதங்கள் நான்குமே சொல்லப்பட்ட கடினம் சீதம் தொடுதற்கரியவெப்பம் சலனமென்னுஞ் சொரூபங்களோடுங் கூடும்.

மனமென்றது ஐயக்காட்சி. பழுதையைப் பாம்பென்றையப்படுவது மனமாகலின் மனக்காட்சியென்றார். இனிக்காட்சியிருமூன்றாவன—ஐயக்காட்சி, வாயிற்காட்சி, விகற்பக்காட்சி, அந்வயக்காட்சி, வெதிரேகக்காட்சி, திரிவுகாட்சியென இவை. இனி நிர்விகற்பக்காட்சியாவது இவ்வாறினோடுங்கூடாது குற்றமறக்காண்பது. ஐயக்காட்சியாவது, இருளிற் பாம்போ பழுதையோவென் றையுறுதல், அதுவே மனக்காட்சி. வாயிற்காட்சியாவது, இந்திரியங்களாற் காண்பது. விகற்பக்காட்சியாவது, பெயர் சாதி குணம் கன்மம் பொருளென்னுமைந்தினாலுங் காண்பது. அந்வயக் காட்சியாவது, புகையினால் அனலறிதல். வெதிரேகக்காட்சியாவது, நாற்றத்தாற்பூவறிதல். திரிவுகாட்சியாவது, பழுதையைப்பாம்பென்று கொள்வது. உ

சாற்றுபெய ரானவை தலம்புனல் கனற்பின்
காற்றுமென லாம்இவை கலந்தகுண மோதின்

நாற்றம்இர தம்உருவம் நற்பரிச மாகும்
போற்றுமிவை நித்தஇயல் பாமிவை புணர்ப்பே. ௧௪

**(உரை)** அப்பூதங்களைன்கும் அப்படிக்கூடின பின்பு அவையிற்றுக்குச் சொல்லும் பெயர்களானவை பிருதிவியும் அப்புவுந்தேயுவும் பின்வாயுவுமென்று சொல்லலாம். இப்பூதங்கள் கூடிய குணங்களின் பெயரை முறையானே சொல்லின் கந்தம் இரதம் உருவம் பரிசம் இவையாகும். தெய்வமாகத்தொழும் இப்பூதங்களைன்கும் அழியாதவியல்புகளையுடையவாம். இவை கூடுமிடத்து மேலானவாயு பூதத்திலேநின்று மூன்றுபூதங்களில் ஒன்றிலொன்றாக அடைவே கூடப்படும். ௩

ஒத்துறு புணர்ச்சியின் உருக்கள்பல வாகும்
வைத்துறு கடாதிபல மண்ணின்வரு மாபோற்
புத்திகுண நற்பொறி புலன்களிவை யெல்லாம்
இத்தில்வரும் நீரினில் எழுங்குமிழி ஒத்தே. ௧௫

**(உரை)** அப்பூதங்களின் சொரூபங்களுங் குணங்களுந் தம்மிலொத்துக்கூடுகிற கூட்டத்திலே வடிவுகள் பலவுண்டாம் (அஃதென் போலெனின்) திரிகையிலேவைத்த மண்ணின்கண்ணே பல கடாதிகள் தோன்றுமாபோல நீரினிற் கிளம்பிய குமிழியையொத்து, புத்தியுங் குணமும் ஞானேந்திரியமாகிய பொறிபுலன்களும் இவையெல்லாம் இவ்வுருவின் கண்ணேயுண்டாம். ௪

பூதமதின் ஒன்றுபிரி யப்புலன் இறக்கும்
நீதியினின் நிற்பன நடப்பனவும் முற்போல்
ஓதும்வகை யாகிஉறு காரியம் உலந்தால்
ஆதியவை யாம்இதனை யறிவதறி வாமே. ௧௬

**(உரை)** அப்பூதங்களில் வாயுப்பிரிய இந்திரியங்கள் கெடும். (புலனிறக்குமெனவே புலன் காரணமாகிய பொறி குணம் புத்திமுதலியவுமிறக்கும்) இம்முறைமையாலே தாபரசங்கமங்களு மிறக்கப்படும். **சொன்ன** முறைமையிற் கூடிப்போந்தகாரியமாகிய சொரூபகுணங்கள் இறந்தாற் காரணமாகிய பூதங்களேயாம். இவையிற்றை இம்முறைமைப் பாட்டாலே அறிவதே ஞானமாவது. ௫



இப்படி யன்றிக் கன்மம் உயிர்இறை வேறுண் டென்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர் செய்திடுங் குற்ற மென்னே
ஒப்பிலா மலடி பெற்ற மகனொரு முயற்கொம் பேறித்
தப்பில்ஆகாயப் பூவைப் பறித்தமை சாற்றி னோ. ௧௭

**(உரை)** இப்படிப் பூதக்கூட்டத்தினால் உருக்கடோன்றி வாயுக் கெடக்கெடுதலன்றி, முன்செய்தகன்மம் பின்னொடருமென்றும் இதனைப்புசிக்கத்தக்கதோர் ஆன்மாவுண்டென்றும் இவையிற்றைக் கூட்டுவான் ஒரு கர்த்தாவுண்டென்றுஞ் சமயிகள் உலகத்தாரை மயக்க உலகத்தார் சமயிகளுக்குச்செய்த குற்றம்யாது? உலகத்தாரைமயக்கச் சமயிகள் கூறுமது, மலடிபெற்ற ஒப்பில்லாதமகன் ஒருமுயலின் கொம்பிலேயேறி ஆகாயத்திற்பூத்த பூவைத் தவறின்றிப் பறித்தானென்னுந் தன்மையோடொக்கும்.

பூதமேதெய்வம், பூதக்கூட்டத்தின் மிகுதிகுறைவே கன்மம், பூதக்கூட்டத்தினிகழுமுணர்வே ஆன்மா; இங்ஙனமன்றி வேறு தெய்வமுங் கன்மமும் ஆன்மாவுமில்லை யென்பது கருத்து. ௬

செய்திடும் கன்ம மெல்லாம் செய்தவர் தம்மைப் பற்றி
எய்திடு மென்னில் இங்கே மாய்ந்திடும் ஏய்வ தெங்ஙன்
மெய்தரு தூலங் கெட்டுச் சூக்கமாய் மேவு மென்னில்
ஐயனே தீபம் போனால் அதனொளி யாவ துண்டோ. ௧௮

**(உரை)** முற்பிறப்பில் ஆன்மாக்கள்செய்த கன்மமெல்லாங் கெடாமல் ஆன்மாக்களைப் பொருந்திநின்று இப்பிறப்பிலே யூட்டுமென்று கூறின், இப்பிறப்பிற்செய்த புண்ணியபாவங்கள் இக்காயத்தோடு கெடுமாதலாற் பிற்பிறப்பிற் புக்குக் கூடுமாறெங்ஙனே, பொருந்திய தூலவுடல்கெட்டுச் சூக்குமமாய்ப் பொருந்துமுறை எப்படியென்னில், திரியோடேகூடி நின்ற விளக்கொளி அத்திரியை நீங்கி வேறே நின்றொளிருமென்னுந் தன்மைத்து. ௭

மாய்ந்துபின் வயலி லிட்ட வைதழை பலிக்கு மாபோல்
ஏய்ந்திடும் கன்ம மென்னில் இட்டிடத் திசையும் மேனி
ஓய்ந்துவந் தவரை உண்ணப் பண்ணுஞ்சோ றுதரத் தற்றால்
வாய்ந்திடும்மலம்வயிற்றிற்கொண்டிடும்வழக்குவைத்தாய். ௧௯

(உரை) வயலினிட்ட வைக்கோலுந்தழையுங் கெட்டுப் பின்பு பயிர்க்கு நன்மையைக் கொடுக்குமாறுபோலக் கன்மந்தோன்றாமற் றன்மைகெட்டுப் பொருந்துமென்று கூறின்,—நீ உவமைகூறிய வைக்கோலுந்தழையும் இட்டவிடத்திற் பயிர்க்கு நன்மையைக் கொடுக்கும் (அன்றிப் பிறவிடத்திற்கு நன்மையைக் கொடுக்கமாட்டா) காயந்தளர்ந்து பசித்து வந்தவரை உண்ணப்பண்ணுவித்த சோறு அவருதரத்து மாண்டாலுண்டாம் பிரயோசனம் அவர்வயிற்றின் மலங்கொள்வார் வழக்குக் கூறினாய். ௮

உருவமும் உணர்வும் செய்தி ஒத்திரா கன்மம் என்னின்
மருவுகை விரல்கள் தம்மின் வளர்வுடன் குறைவுண் டாகி
வருவதிங் கென்ன கன்மம் செய்துமுன் மதியி லாதாய்
பெருகுபூ தங்கள் தம்மின் மிகுகுறைப் பெற்றி யாமே. ௨௦

(உரை) ஒருகாயத்தின்செய்தியும் ஒருணர்வின்செய்தியும் ஒத்திராமற்பேதிக்கப்படுவது கன்மச்செய்தியென்று கூறின், அறிவிலாதாய் முன்பு எந்தக்கன்மஞ்செய்து பின்பு தொழிலை மருவின கைவிரல்கள் ஒன்றுக்கொன்று தம்மில் ஏறியுங் குறைந்துமிருப்பது? வளரும் பூதங்கள் தம்மின் மிக்குக் குறைதலாற் காயமுமுணர்வும் பேதிக்கப்பட்டதல்லது கன்மத்தினாலன்று. ௯

இன்பொடு துன்ப மெல்லாம் எய்துவ கன்ம மென்னில்
நன்புனல் சந்த னாதி நணுகவும் அணுக வொண்ணா
மின்பொலி அழலி னோடு மேவுவ நன்மை தீமை
என்செய்த தியம்பி டாய்நீ இவையெலாம் இயல்ப தாமே. ௨௧

(உரை) ஒரு பொருட்கு இன்பத்துன்பங்களெல்லாங் கன்மத்தாற்பொருந்துமென்று கூறின், தெளிந்த புனலானது சந்தனமுதலாகிய நறுநாற்றத்தோடு கூடவுங் கூடுதற்கரிதாகிய வொளிமிகுதியையுடைய அனலோடு கூடவும் எந்த நன்மை தீமை செய்ததென்று நீ கூறாய், இவையெல்லாம் ஒரு பொருட்கு இயல்பாமாதலாற் பூதகுணமன்றிக் கன்மமில்லை.

தோல்முதலானவை நெருப்பைக் கண்டாற்சுருண்டும் நீர் கூடினால் நெகிழ்ந்தும் வருவது பதார்த்தவியல்பொழிந்து வேறுகன்மத்தாலன்று. யாவும் பதார்த்தவியல் பென்றறிவாயாக. ௧௦



காயத்தின் குணம தன்றிக் கண்டதான் மாவுண் டாயின்
மாயத்திற் சொல்லி டாதே மனமுதல் ஆறி னுக்கும்
நேயத்த தாக வேண்டும் அன்றியே நிகழ்த்து முண்மை
தேயத்தின் முயற்கொம்பெல்லைசெப்புவோர்செய்தியாமே. ௨௨

(உரை) நூறுகாய் அடைகூடவே ஒரு சிவப்புண்டாமாறு போலப் பூதக்கூட்டத்தில் ஒருணர்வுண்டாம். அஃதன்றி, மற்றோரான்மாவென்று தனியேகாணப் பட்டது உண்டாயின், உன் மயக்க நூலிற் சொல்லாதே, மனக்காட்சி முதலாய ஆறுகாட்சிக்கும் பொருந்தச் சொல்லவேண்டும்; காட்சி விகற்பத்தாலொழிந்து கருதலானும் உரையானுங் கூறுமது, உலகத்திற் கோடில்லாத முயலுக்குக்கோடும் அதற்களவும் பெருமையுங் கூறுவோரது கூற்றாம். மனமென்பது ஐயக்காட்சியை. நேயமென்பது பொருத்தத்தை. ௧௧

அருவமே இறைவ னாகில் அறிவின்றா காய மாகும்
உருவமே யென்னிற் பூதக் கூட்டத்தில் ஒருவ னாகும்
மருவிய இரண்டுங் கூடி நிற்பவன் என்னின் மண்மேல்
இருவிசும் பொருகல் லேந்தி நிற்குமோ இயம்பி டாயே. ௨௩

(உரை) கர்த்தா அரூபியென்றுகூறில் அறிவுமில்லையாய் ஆகாயம்போலவாம்; அந்தக்கர்த்தா உருவமுடையவனென்று கூறிற் பூதக்கூட்டத்திற்றோன்றுஞ் சரீரியாதல்வேண்டும்; பொருந்திய ரூபாரூபத்தோடுங் கூடிநிற்பவ னென்றுகூறில், மிக்க ஆகாயமாகிய அரூபத்திலே ரூபமாகிய கல்லைவிட்டாற் றம்மிற்கூடி நிற்குமோ பிரபஞ்சத்தினில்லாதாகையால் ரூபாரூபங் கூடிநில்லாது. ௧௨

பூதத்தே அன்ன மாகி அன்னத்தால் உடம்பு புத்தி
பேதித்தே மனமு மாகிப் பிரிந்தமை திருந்த இன்று
வேதத்தே யுரைக்க என்னோ மேதினி யோர்க ளெல்லாம்
கேதத்தே வீழ்ந்து வேறு நெறியலகேட்கு மாறே. ௨௪

(உரை) பிருதிவி பூதத்தே உணவுதோன்றி அவ்வுணவால் உடலும் அவ்வுடலிலே புத்தியும் புத்தியிலே பேதிக்கப்பட்ட மனமுமுண்டாய் வேறுபட்டவற்றை இப்பொழுது தெரியத்தங்கள் வேதஞ் சொல்லும் வழியும், தங்கள் வேதம் அப்படிச் சொல்லவும் பிரபஞ்

சத்திலுள்ளோ ரெல்லாம் வருத்தத்திலே வீழ்ந்து வேறுவழியல்லா வகையைக்கேட்டு அதனை மேற்கொள்ளுமாறென்னே. ௧௫

போகத்தைமண்ணிற்கண்டுவிட்டுப்போய்விண்ணிற்கொள்ள
மோகத்தராகி அல்லல் முயன்றுழல் மூட ரெல்லாம்
தாகத்தில் தண்ணீர் கண்டு விட்டுப்போய்த் தண்ணீர் கேட்டுச்
சோகித்தே உண்ண வெண்ணித் துயருறு வார்க ளந்தோ. ௨௫

(உரை) பூமியிலே மெய்யாக மாதர்போகத்தைக் கண்டிருந்தும் அதனையநுபவியாது கைவிட்டுப்போய், சுவர்க்கத்திலே போகமுண்டென்று கேட்டு அதனைக் கைக்கொள்ளுதற்கு ஆசையுடையராய்த் தவமென்னுஞ் சிறையிலே முயன்று தடுமாறும் அறிவில்லாதவரெல்லாம், தாகித்தவிடத்தே தண்ணீரை மெய்யாகக்கண்டிருந்தும் அதனை யுண்ணாமற் கைவிட்டுப்போய் மற்றொரு தண்ணீரை ஒருவன் தூரத்திலே உண்டென்ன அதனைக்கேட்டுச் சோகித்து அத்தண்ணீரை உண்டு தாகந் தீரவேண்டுமென்று போய் வழியிலே துயரமுறுவோர் தன்மைபோலும், ஐயோ. ௧௪

வாழவே வல்லை வாமி வலக்கைதா வென்னு யிர்க்குத்
தோழனீ யுன்னை யொப்பார் சொல்லிடி னில்லை கண்டாய்
கோழைமா னுடர்தீ தென்னுங் கொலைகள வாதி கொண்டே
சூழும்வார்குழலார்மொய்ப்பச்சுடரெனத்தோன்றினாயே. ௨௬

(உரை) இவ்வுலகத்துள் எம்மைப்போல நீயும் வாழவல்லை; வாமதந்திரியே உன்வலக்கையைத் தருவாயாக, என்னுயிர்க்குத் தோழனீயேயன்றிச் சொல்லுமிடத்து உன்போல்வார் வேறில்லைகண்டாய், பயந்தமனுடர் பொல்லாங்கென்று சொல்லப்பட்ட கொலைகளவு முதலியவற்றை யாங்கைக்கொள்ளு முறைமைபோலக் கைக்கொண்டு சுற்றுமொழுங்கு நீண்ட குழலினையுடைய மடவார் சேவித்துப்போத விளக்குப்போலத் தோன்றினையாதலாற் றோழனீயே.

வலக்கைதா என்றது பிரியவசனஞ் சொல்லியது. கொலைகளவாதியாவது—கொலை, களவு, கள், காமம், பொய் இவையும், காமம், குரோதம் உலோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலியபிறவுமாம்.

ஈசனார் அயனார் மாலோ டிந்திரன் தெரிவை மார்பாற்
பேசொணா வகைக ளெல்லாஞ் செய்தன்றோ பெரியோரானார்



ஆசையால் அவர்போல் நாமும் ஆகவே வேண்டு மாயின்
வாசமார் குழலா ரோடும் வல்லவா கூடி வாழ்மின். ௨௭

(உரை) உருத்திரன் பிரமா விஷ்ணு இவருடன் இந்திரனும் மாதர்களிடத்துச் சொல்லவொண்ணாதபடி தலையிற்றரித்தும் நாவிற்றரித்தும் மார்பிற்றரித்துங் கௌதமர்சாபந்தரித்தும் மற்றுஞ் செய்துமன்றோ பெரியோரென்றெல்லாராலுஞ் சொல்லப்பட்டார்கள்; ஆகையால் அப்படி அவர்களைப்போல எல்லாராலும் பெரியோரென்று கொண்டாடப்படுதற்கு நமக்கும் ஆசையுண்டாயின் மணந்தங்கிய குழலினையுடைய மடவாரோடு வல்ல வண்ணம் வருந்தியும் பொருந்திவாழ்மின். ௧௬

தையலார் ஊட லாடத் தாமவ ரோடுங் கூடிச்
செய்யதா மரையை வென்ற சீறடி செம்பஞ் சூட்டி
மெய்யெலாம் பாதஞ் சூடும் வேடத்தார் மெய்யிற் கூடா
மையல்மா னுடர்பொய்மார்க்கவேடத்தேமாய்கின்றாரே. ௨௮

(உரை) மகளிர் ஊடின காலத்து அவ்வூடலைநீக்கி அவரோடுங் கூடி, தாமரையினது சிவப்பை ஒப்பழித்தபாதத்தைச் செம்பஞ்சூட்டி அவரதடிகளாற் றமதுகாயமெங்கும் புனைந்துகொள்ளும் வேடத்தினிற்பவராகிய உலகாயத ருண்மையிற் கூடாத மயக்கத்தை யுடைய மானுடர், பொய் வழியாகிய தவவேடத்திற் புகுந்து மாயாநின்றார்கள். ௧௭

வாசமார் குழலி னார்கள் மணிஅல்குல் தடத்தே மூழ்கி
நேசமார் குமுதச் செவ்வாய் அமுதினை நிறைய உண்டு
தேசுலா மணிமென் தோள்மேற் சேர்ந்துவீற் றிருந்திடாதே
மாசுலாமனத்தோரெல்லாம்மறுமைகொண்டழிவர்மன்னே. ௨௯

(உரை) மணம்தங்கிய குழலினையுடைய மடவார்களது இரத்தினத்தினால் அமைக்கப்பட்ட மேகலைபொருந்தின அல்குலென்னுந் துறையின் மூழ்கி சிநேகமிகுதியையுடைய அவரதாம்பல் மலர் போலுஞ் சிவந்த வாயினிலூறும் அமுதத்தை நிறையப் பருகி, ஒளி வீசியமணியினையுடைய மெல்லிய தோண்மீதணைந்து வாழ்ந்திருந்திடாதே, குற்றஞ்சேர்ந்த மனத்தையுடைய பாசமயிகளெல்லாம் மறுமைப் பயனுண்டென்று அழிவர். ௧௮

மதிநிலா நுதலா ரோடு மணிநிலா முன்றி லேறி
முதிர்நிலா வெறிப்பச்செவ்வாய் இளநிலாமுகிழ்ப்பமொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக் கண்கள்மார் பகலமூழ்கும்
புதுநிலா வியநன் போகம் விடுவர்புன் சமயத் தோரே. ௩௦

(உரை) மதிபோலும் விளங்கும் நுதலினையுடைய மாதரோடுங் கூடி ஒளியையுடைய முன்றிலிற்சென்றேறி, பூரணசந்திரன் ஒளிவிட்டுவிளங்க அவரது சிவந்தவாயில் நகையொளிதோன்றச் செறிந்த ஒளிமிக்க முத்துவடத்தைத் தாங்கிய முலைக்கண்கள் தமது மார்பகலத்தே மூழ்கும்படி அழுந்தியநுபவித்து நாடோறும் புதுமைதங்கிய நல்லவநுபோகத்தைக் கைவிடுவர், இவ்வழிநில்லாத அவமாய சமயத்தவர். கக

ஊடுவ துணர்வ துற்ற கலவிமங் கையரை யுள்கி
வாடுவ தடியில் வீழ்ந்து வருந்துவ தருந்த வம்பின்
கூடுவ துணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவ தின்ப முத்தி யித்தில்நின் றார்கள் முத்தர். ௩க

(உரை) கல்விபொருந்தின (புதிதாகக்கூடிய) மாதரைநினைத்துத் தம்முடனூடுவதானால் அவரை ஊடல் தீர்ப்பது பொருட்டாகத் தளர்தலும் அவர்களடிகளில் வீழ்ந்து வருந்துதலுமே அரிதாகச் செய்யுந் தவமாம்,—அப்படித் தவத்தினின்றபின் அம்மகளிரோடுந் தன்னறிவு கெட்டுக் கூடுவது முத்தியாம், இந்திரியங்களெல்லாம் ஒருமைப்பட விருப்பம் நிலைபெறுவது முத்தியின்பமாம்: இவ்வழியில் நின்றவர்களே முத்தராவர். உ௦

வீட்டினை உளதென் றோடி மெலிவதிங் கென்னை வீடு
காட்டினோர் கண்டோர்கேட்டோர் கரியவை உண்டேல்காட்டீர்
நாட்டினில் அரசனாணைக் கிசையவே நடந்து நாளும்
ஈட்டியபொருள்கொண் டிங்கேஇன்பத்துள் இசைந்திடீரே. ௩உ

(உரை) காணப்பட்ட ஸ்திரீபோகத்தை அநுபவியாது வேறே வீட்டின்பமுளதென்று தடுமாறி மெலியுந்தவத்தைச்செய்வதியாது? அந்தவீட்டினைக் காட்டினவர்களையும் கண்டவர்களையும் அதனைக் கேட்டவர்களையும் உண்டாகிற்சான்று காட்டீர்? அதுகாட்டமாட்டீராயின், உலகத்தின்கண் அரசனுக்கிணைவழியில் நடந்து நாடோறுந் தேடியபொருள்கொண்டு இப்பிரத்தியட்சமான இன்பத்தை இவ்விடத்திற் பொருந்துவீர். உக

## உலகாயதன்மதம் மறுதலை

உள்ள தாவது கண்ட தென்றுரை கொண்ட தென்
னுல கத்துநீ, பிள்ளை யாய்வளர் கின்ற நாளுனைப் பெற்ற
தாயொடு தந்தையைக், கள்ள மேபுரி கால னுருயி ருண்ண
வின்றொரு காளையாய், மெள்ள வேயுள ரென்று கொண்டு
விரும்பு மாறு விளம்பிடே. ௩௩

(உரை) உலகாயதா ! நீ உலகத்துக் காட்சியே மெய்யென்றும் அனுமான முதலிய பொய்யென்றுங் கொள்ளப்பட்டது என்னை? நீ பிறந்துவளர்கின்றநாளில் உன்மாதாவினுயிரையும் பிறப்பதன் முன் உன்பிதாவினுயிரையும் கட்புலனுற்காணாத தொழிலைப் புரியும் எமன் கொண்டுபோக நீ இளமை நீங்கியபின் மாதாபிதா நமக்கு உண்டென்று மெல்லக் கருதியநெறி நீ கூறிய காட்சியன்று, அனுமானமே. உண்ணல் - கோடல், விரும்பல் - கருதல். க

இடித்து மின்னி இருண்டு மேக மெழுந்த போதிது
பெய்யுமென்று, அடுத்த தும்அகில் சந்த முந்தி அலைத்து
வார்புனல் ஆறுகொண், டெடுத்து வந்திட மால்வ ரைக்க
ணிருந்து கொண்டல் சொரிந்த தென்று, முடித்த தும்இவை
காட்சி யன்றனு மான மென்று மொழிந்திடே. ௩௪

(உரை) மேகம் முழங்கியும் மின்னியும் இருண்டும் பரந்தெழுந்தவிடத்து இதனால் மழைபெய்யுமென்று நினைப்புண்டானதும், ஆறு அகில் சந்தன முதலியவற்றைத்தள்ளி அலைத்தொழுகுநீரைக் கொண்டுவந்திட, அதனைக்கண்டு பெரியமலையின்கண் மேகமிருந்து பெய்ததென்று நினைந்து துணிந்ததும், இவையிரண்டும் நீகூறிய காட்சியன்று அனுமானமென்று கூறுவாயாக. உ

காண்ட லோஅநு மான மாவதும் காட்சி முன்னதும்
காட்சியேல், பூண்ட பூத உடம்பி னுள்எழு போத மென்
கொடு கண்டனை, மாண்ட வாயின் மனங்கொள் ஞான
முணர்ந்த தும்அநு மானமென்று, ஈண்டு பூத மியைந்த திவ்
வுடல் என்ப தென்பிர மாணமே. ௩௫

(உரை) அநுமானமென்று கூறப்பட்டதுங் காட்சியே, அது பூர்வக்காட்சி யாகையால் பூர்வக்காட்சியுங் காட்சியென்று நீகூறில்,

பூதக்கூடத்தினுள் ஓரறிவெழுமென்று கூறியது அநுமானமன்றி யாதுகொண்டு கண்டனை ; அன்றியும், சத்தாதிகளை நல்லபொறியிடமாக நின்று அறியுமென்னு மறிவுங் காட்சியன்று அநுமானமென்று கொள்வாயாக ; இஃதன்றிப் பிரமாணமு மில்லையென்று கூறுவை ; அங்ஙனங்கூறிற், பூதக்கூட்டத்தின் உருத்தோன்றுமென்று கூறியது யாது உன்காட்சியும் அநுமானப்பிரமாணமே யென்று அறிவாயாக.

இவ்விடத்துப் பூதங்களின்கூட்டத்து உடம்பாமென்று சொல்லியது அநுமானத்தாலென்க. இலிங்கத்தைக் கொண்டு இலிங்கியை யூகிக்கிறஞானம் அநுமான மெனப்படும். ரு

பழுதி லாமறை கண்ட நூல்பழு தின்றி யுண்டது
பாரின் மேன், மொழிவர் சோதிட முன்னி யின்னது முடியு
மென்பது முன்னமே, அழிவி லாதது கண்ட னம்அவை
யன்றி யுஞ்சில ஆகமங்களின், எழுதி யோர்படி ஏன்று
கொண்டிரு நிதியெ டுப்பதும் எண்ணிடே. ருசு

(உரை) குற்றமில்லாத வேதமுதலாகிய நூல்கள் குற்றமின்றிச் சொல்வனவுள; அவையெங்ஙன மென்னிற், பூமியின்கட் சோதிட நூலோர் கருதி நிகழ்காலத்தினின்றும் எதிர்காலத்துவினையை முன்பு கூறுநிற்பர்கள். பின்பு அதுவும் அழிவில்லாததாகக் கண்டனம். அவையொழிந்துஞ் சில நூற்பிரமாணத்தினுள்ளபடியை எடுத்துக் கொண்டு இறந்தகாலத்தில் வைக்கப்பட்டுப் பூமியின்கண் மறைந்து கிடக்கும் பொருள்களையுமெடுக்கப்படும். அவை நூற்பிரமாணமே யென்றறிவாயாக. சு

பூத மானவை நித்த மென்று புகன்ற தென்னை உருக்
களாய், ஆத லோடழி வாகு மாதலி னுக்கு வோரவர் வேண்
டிடும், காத லோடு கடாதி மண்கொ டியற்று வோருளர் கண்
டனம், சீத நீரி லெழுந்த கொப்பு ளிகழ்ந்த மாருதச் செய்
கையே. ருஎ

(உரை) பூதம் நான்கும் அழியாத வியல்புடைத்தென்று கூறியதென்னை ? பூதக்கூட்டத்தில் உருக் [illegible] கெடுதலு முண்டாதலால் இவை நித்தமன்றி [illegible] தாவேண்

# திருவிளையாடற் புராணம்

## மூலமும் விசேட உரையும்

### சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவரும்

தமிழ் நூல்களிற் சிறந்தன சில. அவைகளுள் ஒன்று, பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணம். இப்புராணம் சோமசுந்தரக் கடவுள் புரிந்த திருவிளையாடல் அறுபத்து நான்கையும் நன்கு விளக்குவது.

நூலாசிரியராகிய பரஞ்சோதி முனிவர் பல கலையில் வல்லவர்; பாவலர்; அன்பர். அம்முனிவர், திருத்தக்க தேவர் கல்வியிலும், சேக்கிழார் அன்பிலும், கம்பர் கவியிலும் முறையே படிந்து மூழ்கித் திளைத்தவர் என்பது, அவர்தம் திருவாக்குடன் உறவுகொண்டு ஒன்றுபட்டு நிற்கும் நுண்புலவோர்க்கு இனிது புலனாகும். முனிவர் மொழியில் தமிழ் மணமும் சிவ மணமும் கமழ்ந்துகொண்டிருத்தல் வெள்ளிடைமலை.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த புராணத்துக்குச் சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் நீண்டகாலம் தமிழாசிரியரா யிருந்தவரும், பேர்பெற்ற உரையாசிரியருமாகிய திருவாளர் - ஈக்காடு - இரத்தினவேல் முதலியார் அவர்கள் பொழிப்புரையும் விருத்தியும் எழுதியுள்ளார்கள். அவ்வுரை எவர்க்கும் பயன்படுமுறையில் வரையப்பட்டிருத்தலால், அதைப் பெற்றின்புறத் தற்காலத் தமிழுலகம் விழைந்த வண்ணமா யிருக்கிறது.

பரஞ்சோதி முனிவர் அருளிய மூலமும், இரத்தினவேல் முதலியார் உரையும் கொண்ட பதிப்பு, டெம்மி எட்டு பக்கமுடைய ஆறுபாரங் கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சஞ்சிகை 1935-ம் ஆண்டு ஜுலை மாத முதல் வாரத்திலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும். அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

**சந்தா விவரம்:**

| | ரூ. | அ. |
|---|---|---|
| மாதச் சஞ்சிகை (சென்னைக்கு மட்டும்) ... ... | 0 | 4 |
| புத்தக முழுவதற்கும் - முன்பணம் - சென்னைக்கு ... | 4 | 0 |
| ,, ,, ,, வெளியூர்க்குத் தபாற்செலவுடன் | 5 | 8 |
| (முன்பணம் 1935ஆ ஆகஸ்டு மாதத்துக்குள் அனுப்பப்படவேண்டும்) | | |
| புத்தகம் முற்றுப்பெற்றபின் ... | 8 | 0 |

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முற்றுப் பெறலாம்.

7 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோர்க்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

திரு. வி. உலகநாத முதலியார்,
முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

"நவசக்தி" ஆசிரியர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

# இயற்றிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியபுராணம்—அரும்பதவிசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும் ... | 7 | 0 |
| மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும் ... | 2 | 8 |
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் ... | 2 | 0 |
| பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு—பொழிப்புரையுடன் ... | 2 | 0 |
| தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு—முதற் பகுதி ... | 1 | 8 |
| ஷை இரண்டாம் பகுதி ... | 1 | 8 |
| முருகன் அல்லது அழகு ... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ... | 0 | 12 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் ... | 0 | 8 |
| சைவத்திறவு ... | 0 | 8 |
| சமரச சன்மார்க்க போதம் ... | 0 | 8 |
| சமரச சன்மார்க்கத் திறவு ... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ... | 0 | 8 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் ... | 0 | 8 |
| இமயமலை அல்லது தியானம் ... | 0 | 6 |
| காரைக்காலம்மையார் திருமுறை—அரும்பதக் குறிப் புரையுடன் ... | 0 | 6 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் ... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல் ... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் ... | 0 | 4 |
| நாயன்மார் ... | 0 | 3 |
| சமரச தீபம் ... | 0 | 2 |
| நினைப்பவர் மனம் ... | 0 | 2 |
| சைவ சமய சாரம் ... | 0 | 1 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்கு வோர்க்குத் தபாற் செலவின்றி [illegible] கமிஷன் கழித்து வி. பி.யில் அனுப்பப்படும்.

அவற்றை ஸ்வீடன்பர்க் என்ற தத்துவ சாஸ்திரி கூறுவதோடு ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்துள்ளார். ஸ்வீடன்பர்க் கூறும் உண்மைகள் பல நமது சைவசித்தாந்தக் கொள்கைளோடு ஒத்திருக்கின்றன என்பது நாமறிந்ததொன்று. இந்நூலைப்பயில்வோர் நமது சாத்திரத்தில் நிரம்பிய பற்றுடையாராவார்கள் என்பதில் ஐயமில்லை. அவ்வப்போது இம்முறையில் நமது சமயத்துக்காக உழைக்கும் திரு. செட்டியாரவர்கட்கு எமது நன்றி உரியதாகுக.

---

## சென்னையில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் சொற்பொழிவுகள்

சுவாமிகள் 6-6-35 ல் போலீஸ் கமிஷனர் ஆபீசு வீதியில் 12-ம் நெ. பங்களாவில் வந்து இறங்கிய பிறகு எழும்பூரில் அப்பர் சுவாமிகள் சரித்திரத்தை மிக விரிவாகவும் மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரத்தைச் சுருக்கமாகவும் விளக்கி சைதாப்பேட்டை, நுங்கம்பாக்கம், பல்லாவரம் முதலிய பல இடங்கட்குச் சென்று சமயப்பிரசாரம் செய்தார்கள். இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ஆண்டு விழாவையொட்டி 12-7-35 முதல் மூன்று நாட்கள் தலைமைதாங்கிப் பேர்வையை நடத்துவார்கள். அது பற்றிய அறிக்கையை மற்றோரிடத்திற் காண்க. நமது சமாஜத்திலும் சிலநாட்களில் சுவாமிகள் சொற்பொழிவுகள் நடைபெறும். அதைப்பற்றிய அறிக்கை பின்னர் வெளியிடப்படும்.

---

### அனுதாபக் கூட்டம்

திருக்குறள் விளக்க ஆசிரியர் - திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் சிவபதமடைந்தமை குறித்து நமது சமாஜத்தின் பிரிவாற்றாமையைத் தெரிவிக்க ஒரு பொதுக்கூட்டம் சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகாநந்த நிலையத்'தில் 14-7-35 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கூடும். அனைவரும் வருக.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 8. No. 7

சென்னை இராயப்பேட்டை

## ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை

# 31-ம் ஆண்டு விழா

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ௩௧-ஆம் ஆண்டு நிறைவு விழா, நிகழ் யுவ ஆண்டு ஆனித் திங்கள் ௨௮, ௨௯, ௩௦ (1935 ஜூலை 12, 13, 14) வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய இந்நாட்களில், இராயப்பேட்டை மோபரீஸ் இராஜ வீதியிலுள்ள "குகானந்த நிலைய"த்தில் நடைபெறும்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத் தலைவர் - **ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்** தலைமை வகித்தருள அன்புடன் இசைந்துள்ளார்கள்.

### முதல் நாள்

**(12-7-35) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிமுதல் 8 மணிவரை**

வரவேற்பு முதலியன.
காங்கேயநல்லூர் திருவாளர் - கிருபானந்தவாரி அவர்கள் —"திருப்புகழ் நுட்பம்"
தலைவர் கருத்துரை.

### இரண்டாம் நாள்

**(13-7-35) சனிக்கிழமை மாலை 5 மணிமுதல் 8 மணிவரை**

ஸ்ரீமதி ஈ. த. இராஜேஸ்வரி அம்மாள் அவர்கள் M. A., L. T. —"கோளறு பதிக உண்மை"
திருவாளர் - வித்வான். பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்கள் —"பாதி விருத்தம்"
தலைவர் கருத்துரை.

### மூன்றாம் நாள்

**(14-7-35) ஞாயிற்றுக்கிழமை பகல் 3 மணிமுதல் இரவு 8 மணிவரை**

அறிக்கை படித்தல்.
திருவாளர் - வித்வான். தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், M. A., B. L. —"பெரியாழ்வார்"
திருவாளர் - திரு. மு. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் —"அப்பர்"
ஸ்ரீமத் - வரதராஜ சுவாமிகள் —"ஈசுவர நிர்ணயம்"
வந்தனை கூறல் முதலியன.
தலைவர் கருத்துரை.

**Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.**